A

# rimer of Carnatic Music

# கர்நாடக

# சங்கீத வித்தியாபோதினி

STEPHEN

CHRI... LITERATURE SOCIETY FOR INDIA

...HABAD RANGOON COLOMBO

1926

A

7

NR21
M24.

B

# A Primer of Carnatic Music

1-155-p.

## கர்நாடக சங்கீத வித்தியாபோதினி

BY

REV. L. I. STEPHEN

*Principal, Summer School of Indian Music*

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDI

MADRAS ALLAHABAD RANGOON COLOMBO

1926

C. L S. PRESS, MADRAS—1926

# PREFACE

THIS little Primer of Carnatic Music was published as a result of requests made by various people and organisations in South India. During recent years there has been a very considerable revival of interest in Indian music particularly in regard to the teaching of music in schools. There is a keen desire now-a-days in most of the girls' schools to have regular instruction in Indian music. This involves the provision of a suitable text book. Numbers of individuals are now anxious to learn something of the theory and scienc... ...ian music and many of them have urged me to arrange ...ction of a text book like this. In addition our ... ...n Music, which has been meeting for s... ...t necessary to provide some su... This text book is the res...

...f Aided Educa- tion... ...ch could be used... ...mmittee appoi... girls s... Rev. L. ... prepare a s... the press a ... not be printed ... able to overco... to the C.L.S., fo...

The book contains a simple account of the theory of South Indian music together with exercises suitably graded. These exercises are the usual ones followed by South India music teachers.

In addition a large number of songs have been included to illustrate the different ragas. In many cases these songs have been provided with new words so as to make them suitable for use in all schools, as many of the old songs were sectarian.

It is hoped that this book will be found of very great us[e] by all those engaged in the teaching of music in schools a[s] well as by those who wish to study for themselves.

H. A. POPLEY.

*September 8, 1926.*

# நூன்முகம்

இந்து சங்கீத சாஸ்திரமானது அதன் சிறப்பிலும் பரப்பிலும் பரந்த சமுத்திரம் போன்றது. அதனது சிறப்பு எத்துணையதோவெனின் நம் பரதமாதாவுக்கு இருகண்கள் போன்ற ஞானம், கானம் என்னும் இருவகை சாஸ்திரங்களில் ஞானம் பரத்துக்கு மாத்திரம் சாதனமாயிருக்க, கானமோ இகத்துக்கும் பரத்துக்கும் பரம சாதனமாயுள்ளது என்பதினாலேயே அஃதறியற்பாலது. இத்துணைய சிறப்புவாய்ந்த சங்கீத சாஸ்திரமாகிய ஒள்ளிய அரதன மாலையை ஆன்றோர் நந்தமிழணங்கின் திருமார்பில் அலங்காரமான அணிகலனாகப் புனைந்தனர். அஃது நாளடைவில் மலினமடைந்து ஒளி குறைந்து போயிற்றென்று பல்லோர் பரிதபிக்கலாயினர். அது காரணம் பற்றியே சிலகாலமாக இதைப் புதுக்கி விளக்கிப் புனைவான் நந் தமிழ்நாட்டின்கண் காயகஸ்தர் பல்லோரால் பரம பிரயத்தனங்கள் நடந்தேறி வருவது யாருமறியாத தன்று.

இஃதிங்ஙனமாக காலத்துக்குக் காலம் மேலை நாட்டினின்று இந்நாட்டுக்குட் புகுதரும் ஆங்கில மாதின் புத்திரருட் சிலர் நந் தமிழணங்கினது வாய்ப்புடை வனப்பையும் அவளது திருமேனியிலிலங்குஞ் சிறந்த அணிகலன்களையுங் கண்ணுற்று மனவிம்மிதமடைந் தாசையுறலாயினர். அவருள் நந்தமிழணங்கினது திருமார்பிலிலங்கிய அரதனமாலை மீது கண்வைத்தார் மேலைநாட்டு மாப்புலியாகிய நம் பாப்புலி. அன்னார் இந்நாட்டி லடியெடுத்து வைத்த நாள்தொட் டின்றுகாறும் இந்திய கானமே அவரது போனமும் பானமுமாயிற்று. இத்தென்னிந்தியாவிலுள்ள கிறிஸ்தவ குழாத்துள்ளும் பள்ளிக்கூடங்களிற் பயிலுஞ் சிறார் சிறுமிகளுக்குள்ளும் இந்து சங்கீத அறிவைப் புகட்டி அவர்களை இசைவல்லோராக்கும் அரிய பெரிய முயற்சிகளெவையுண்டோ அவையனைத்தையுஞ்

செய்துவரலாயினர். அவரது நன்முயற்சியால் வருடந்தோறும் சென்னையின்கண் இளவேனிற்கால சங்கீத பாடசாலை யொன்றேற் பட்டு நடந்துவருகிறது. தமிழ்நாட்டிலெங்குமுள்ள போதகன்மார், சுவிசேடகர், உபாத்திமார், ஆண் பெண் பாலாராகிய மாணவர் யாவரும் சங்கீத பயிற்சி பெற்றுவருகிறார்கள். சமீபத்தில் மிஷனெரி கல்வி யாலோசனை சங்கத்தாரால் சகல பெண்பாடசாலை களிலுஞ் சங்கீதங் கற்பிக்கப்படும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதம் கிறிஸ்தவ ஜனசமூகத்துள்ளும் கல்விச்சாலை மாணவ ருள்ளும் இந்து சங்கீத அறிவு பரம்பத்தக்க முயற்சிகள் யாவும் நடந்துவருகின்றன.

இச்சங்கீத பயிற்சிக் குதவியாயிருக்க ஒரு சங்கீத பாடப் புத்தகம் ஏற்படுத்துதல் அத்தியாவசிய மென்றுணரப்பட்டது. தமிழில் பல காயகஸ்தர்கள் சங்கீத நூல்களியற்றியிருக்கின்றனர். அவை ஏற்கனவே சங்கீத பயிர்சியுள்ளோருக்குப் பெரிதும் உதவி யாயிருப்பினும் மாணவருக்கேற்ற போதனு முறையாய்ச் சங்கீத நூலொன்றேற்படுவது இன்றியமையாததாய்க் காணப்பட்டமை யால் மிஷனெரி கல்வி யாலோசனை சங்கத்தாரது வேண்டுகோட் படி 'கர்நாடக சங்கீத வித்தியா போதினி' யென்னும் இச்சிறு நூல் பிரசுரிக்கப்பட்டது. இதற்கு இந்து சங்கீத மென்னுமல் கர்நாடக் சங்கீதமென்று நாமமிட்ட தென்னையோவெனில் இஃது தென் னிந்தியாவுக்கேயுரிய சங்கீத மென்பதுபற்றியே யென்க. இச்சிறு நூலில் சுரம், இராகம், தாளம், பாடல் ஆகிய பிரிவுகள் போதனு முறைக்கிசைவாய் வரிசைப்படுத்தியும், முதலில் அறியவேண்டிய சங்கீத சாஸ்திர விவரமும் அதையொட்டி யுதாரணங்களாக் அப் பியாசங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வப்பியாசங்கள் பொதுவாக சங்கீத வித்தியார்த்திகளுக்குக் கற்பிக்கப்பட்டு வரு வனவே யொழிய வேறன்று. ஆயினும் சாகித்தியங்களெல்லாம் இந்நூலாசிரியராலேயே நூதனமாயியற்றப்பட்டவை. பாடல்கள் இனிமையும் சுலபமும் முக்கியமுமான இராகங்களில் அமைக்கப் பட்டிருக்கின்றன. தியாகராஜ கீர்த்தனங்கள், இராமாயண கீர்த் தனங்கள், ஜாவளிகள், தேவாரம், திருப்புகழ்கள் கொடுக்கப்பட்

டிருக்கின்றன. தமிழ் மாணவருபயோகத்துக்காகவும் விசேஷமாய் தமிழ்க் கிறிஸ்தவரின் நன்மைக்காகவும் தெலுங்கு பாடல்களுக்குப் பதிலாக தமிழ்ப் பாடல்க ளெழுதப்பட்டிருக்கின்றன. தெலுங்கு பாடல்களின் இனிமை கெடாதவண்ணம் வார்த்தையிசைவுகளமைந் திருக்கத்தக்க எல்லா முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட்டது. பாடல்கள் கூடியமட்டும் எம்மதத்தினருக்குஞ் சம்மதமாயிருக்கும் படியான சமரசப் போங்கானவை. இவைகளுக் கெழுதப்பட்டிருக் கும் சுரங்கள் பெரும்பாலும் தென்னிந்தியாவில் சிறந்த சங்கீத வித்துவான்களின் நடைகளைத்தழுவியே யெழுதப்பட்டன. இந்த விஷயத்தில் 'சங்கீத ரசார்ணவம்' 'தியாகராஜ ஹிருதயம்' முதலிய நூல்களின் ஆசிரியராகிய ம-ா-ா-ஸ்ரீ வித்துவான் கெ. வி. ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்களது சங்கீத நூல்கள் பெரிதும் உதவியா யிருந்தன. ம-ா-ா-ஸ்ரீ வித்துவான் நாகோஜிராயரவர்கள் பிர சுரித்த 'இராகபோதினி' யென்னும் நூலைத்தழுவி இராக விங்யா சங்களெழுதப்பட்டிருக்கிறது. மற்றுஞ் சில நூற்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டன. இவைகளின் ஆக்கியோன்க ளனைவருக்கும் பெரிதும் கடன்பாடுடையவர்களா யிருக்கிறோம்.

இந்நூலை அச்சியற்றித் தமிழுலகுக்கு உபகரித்த சென்னை சன்மார்க்க நூற்சங்கத்தாருக்கு நாம் நன்றிபாராட்டாதிருக்க முடி யாது. அவர்கள் மிகச் சிரமமேற்று இச்சிறு நூலை அச்சியற்றின தற்காக அவர்களுக்கு அதிக நன்றிகூறுகிறோம்.

தமிழ் சங்கீதத்தின்மீது அபிமானம் வைத்துக் கற்றறிய வேண்டுமென்னும் அவாவால் இந்நூலைக் கையாடுகிற யாவருக்கும் இது பெரிய உதவியாயிருக்குமென்று பகவான் திருவருளை முன் னிட்டுக் கோருகிறோம். சுபம்!

எல். ஐ. ஸ்டீவன்.

# CONTENTS

## பொருளடக்கம்

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | Preface (English) | 3 |
| 2. | நான்முகம் | 5 |
| 3. | பொருளடக்கம் | 9 |
| 4. | அட்டவணை | 11 |

| அத்தியாயம். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 1. | Swaras and Srutis—சுரங்களும் சுருதிகளும் | 1–5 |
| | Exercises in Srutis—சரளி வரிசைகள் | 7–10 |
| 2. | Tala-Time Measure—தாளம் | 11–17 |
| | Exercises in Tala—அலங்காரங்கள் | 18–22 |
| 3. | Ragam—இராகம் | 22–25 |
| | Exercises in Ragams—கீதங்கள் | 25–31 |
| 4. | Varja Ragam—வர்ஜ இராகம் | 31–33 |
| | Exercises in Varja Ragams—சுரஜதிகளும் வர்ணங்களும் | 34–41 |

| அத்தியாயம். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| | கீர்த்தனைகளும் இராக விந்நியாசங்களும் ... ... ... | 42 |
| | a. ஔடவ இராக கீர்த்தனைகள் ... ... ... ... | 43–48 |
| | b. ஔடவ ஷாடவ கீர்த்தனை ... ... ... ... | 49 |
| | c. ஔடவ சம்பூரண இராக கீர்த்தனைகள் ... ... ... | 50–54 |
| | d. ஷாடவ ஷாடவ கீர்த்தனை ... ... ... ... | 55 |
| | e. ஷாடவ சம்பூரண கீர்த்தனைகள் ... ... ... ... | 56–59 |
| 5. | Vakra Ragam—வக்ர இராகம் ... ... ... ... | 60–61 |
| | Exercises in Vakra Ragams—<br>வக்ர இராக கீர்த்தனைகள் ... ... ... ... | 62–79 |
| 6. | Samboorana Ragams—சம்பூரண இராக கீர்த்தனைகள் ... ... | 80–93 |
| | Some Selected Lyrics—சில முக்கியமான கீர்த்தனைகள் ... ... | 94–105 |
| 7. | Miscellaneous Songs—பலவிதமான பாடல்கள் ... ... | 106–126 |
| 8. | Appendix—அநுபந்தம் I ... ... ... ... | 127 |
| | ,, அநுபந்தம் II ... ... ... ... | 136 |

# INDEX

## அட்டவணை

### கீதங்கள்


| லக். | தமிழ் சாகித்யம். | இராக-தாளம். | தெலுங்கு சாகித்யம். | பக்கம். |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ குருபர | மலஹரி—ரூபகம் | ஸ்ரீ கணநாத | 25 |
| 2. | புவனதாரக | மலஹரி—திரிபுடை | கொயலீரனு | 26 |
| 3. | தருமேசா | மோஹனம்—ரூபகம் | வரவீணா ... | 27 |
| 4. | வேத நூலோ | ஆரபி—திரிபுடை | ரேரே ஸ்ரீரா | 28 |
| 5. | வானுலகிருந்தே | காம்போதி—ஆதி | மந்தர தாரே | 28 |
| 6. | அகிலமனோகா | ஆனந்தபைரவி—ஆதி | கமல சுலோச | 29 |
| 7. | கமலநயனு | கல்யாணி—திரிபுடை | கமல ஜாதள | 30 |
| 8. | சகலசுகாதிப | கௌளா—ரூபகம் | சகலசுரா ... | 30 |
| 9. | சுரானுதினமும் | சுத்த சாவேரி—ஏகம் | அதுலிதவிய | 31 |


### சுரஜதிகள்


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஞானலோலா | பிலஹரி—ஆதி | ராரவேணு | 34 |
| 2. | சாமிதயை கூராய் | மோஹனம்—ஆதி | சாமிதயமீ | 35 |
| 3. | ஆண்டவன் நாமம் | கமாஸ்—ஆதி | சாம்பசிவா | 36 |

## வர்ணங்கள்


| லக். | தமிழ் சாகித்யம். | இராக-தாளம். | தெலுங்கு சாகித்யம். | பக்கம். |
|---|---|---|---|---|
| 1. | சாமி உன்னை நீங்கின். | சங்கராபரணம்—ஆதி ... | சாமி நின்னே ... | 38 |
| 2. | பரமேசனே தூய ... | கல்யாணி—ஆதி ... | வனஜாக்ஷி ... | 39 |
| 3. | இதய நின்னை நாடி ... | பைரவி—ஆதி ... | வனித நின்னே ... | 40 |


## கீர்த்தனைகள் (அகராதி)


| லக். | பாட்டு முதற்குறி. | இராக-தாளம். | பக்கம். |
|---|---|---|---|
| 1. | அருமறையோர் நிதம் ... | கானடா—ஆதி ... ... ... | 79 |
| 2. | அனுதைகளின் நேசன் ... | ஆபோகி—ரூபகம் ... ... ... | 48 |
| 3. | உள்ளத்தோங்கும் ... | தோடி—ரூபகம் ... ... ... | 103 |
| 4. | சமயமிதே என்னையாள ... | பியாகு—ரூபகம் ... ... ... | 66 |
| 5. | நாடெலாந்திரிந்து ... | ஹனுமத்தோடி—ஆதி ... ... ... | 81 |
| 6. | நீயேகதி பெருமானே ... | காம்போதி—ரூபகம் ... ... ... | 58 |
| 7. | நெஞ்சமுருகிக் ... ... | கமாஸ்—சாபு ... ... ... | 77 |
| 8. | பக்திமார்க்கமே ... ... | சரசாங்கி—ஆதி ... ... ... | 90 |
| 9. | பரம்பொருளே ... ... | சாமா—ரூபகம் ... ... ... | 49 |
| 10. | மந்தைதனைவிட் ... ... | தன்யாசி—ஆதி ... ... ... | 52 |


## இராமாயண கீர்த்தனைகள்


| | | | |
|---|---|---|---|
| 1. | இத்தனை கோபமும் ... ... | மத்யமாவதி—ஆதி ... ... ... | 46 |
| 2. | இந்த யோசனை ஏனையா ... | கல்யாணி—ஆதி ... ... ... | 70 |

| லக். | பாட்டு முதற்குறி. | இராக—தாளம். | பக்கம். |
|---|---|---|---|
| 3. | இந்தா விபீஷணு ... | பராஜு—சாபு... | 56 |
| 4. | எப்படி மனந்துணிந்ததோ | ஹுசேனி—ரூபகம் | 72 |
| 5. | என் பாக்கியமே பாக்கியம் | சுருட்டி—சாபு | 67 |
| 6. | மண்ணிலரசர் போல | பிலஹரி—சாபு | 50 |
| 7. | ராமா நீயும் இப்படி | முகாரி—ஆதி | 74 |

## நந்தனர் சரித்திரக் கீர்த்தனைகள்

| லக். | பாட்டு முதற்குறி. | இராக—தாளம். | பக்கம். |
|---|---|---|---|
| 1. | ஐயவொருசேதி ... | பூரிகல்யாணி—ஆதி | 114 |
| 2. | சிவலோக நாதனை | நாதநாமக்ரிய—ரூபகம் | 64 |
| 3. | நந்தன் சரித்திரம் | சங்காபரணம்—ஆதி | 62 |
| 4. | பறையா சிவசிதம்பரம் | மோஹனம்—ஆதி | 45 |

## ஜாவளி நடைகள்

| லக். | பாட்டு முதற்குறி. | இராக—தாளம். | தெலுங்கு பாடல். | பக்கம். |
|---|---|---|---|---|
| 1. | அத்தனருளிருந்தாலே | காபி—சாபு | ஜாணத்தன | 108 |
| 2. | நாதனே நின்னடியில் | கமாஸ்—ரூபகம் | ஜானரோச | 107 |
| 3. | திருநாமந் தனைத்துதி | நாட்டகுரஞ்சி—ஆதி | தருமாருலாட | 109 |

அட்டவணை

## தியாகராஜ கீர்த்தனை நடைகள்


| லக். | பாட்டு முதற்குறி. | இராக—தாளம். | தெலுங்கு கீர்த்தனம். | பக்கம். |
|---|---|---|---|---|
| 1. | ஆசையெனுஞ் சூறை ... | ஆனந்தபைரவி—ஆதி ... | ராமராமநீவா ... | 76 |
| 2. | ஆரிருந்தும் ஆவதேன் ... | ஸ்ரீரஞ்சனி—ஆதி ... | மாருபல்ககுன்னு ... | 102 |
| 3. | இயேசு ஸ்ரீபதாம்புஜம் ... | கரஹரப்ரிய—ரூபகம ... | ராமநீசமான ... | 88 |
| 4. | ஒரு நேசன் உயர்வா ... | ஹரிகாம்போதி—ரூபகம் ... | ஒகமாட ஒகபாணமு... | 92 |
| 5. | உனையே யடைந்தவர் ... | பைரவி—ஆதி ... | உபசாரமுலனு ... | 69 |
| 6. | உனையே நான்பல ... | சுத்த பங்காள—ஆதி ... | தொலிநேஜேஸின . | 99 |
| 7. | காருண்ய நாதனே ... | பூரண ஷட்ஜம்—ரூபகம் ... | லாவண்ய ... | 55 |
| 8. | சந்ததம் நின் தாள் ... | கரஹரப்ரிய—ஆதி ... | சங்கற்பமெட் ... | 94 |
| 9. | தாகத்தாலென் ... | தன்யாசி—ரூபகம் ... | ஸ்யாமசுந்த ... | 95 |
| 10. | நாயேன் மனத்துயர் ... | ஆனந்தபைரவி—ஆதி ... | நீயே தெலியக ... | 104 |


## பட்டணம் சுப்ரமணிய ஐயர் கீர்த்தனை நடை


| லக். | பாட்டு முதற்குறி. | இராக—தாளம். | தெலுங்கு கீர்த்தனம். | பக்கம். |
|---|---|---|---|---|
| 1. | ஏழையேன் மீதிலே ... | சங்கராபரணம்—ஆதி ... | எந்துகுநிர்தய ... | 98 |
| 2. | மனுகுலதிலகா ... | சக்ரவாகம்—ஆதி ... | எதிகுலதிலகா ... | 83 |
| 3. | மனதிற்குடிகொள் ... | ஹம்ஸத்வனி—ரூபகம் ... | மனசுகருக ... | 43 |
| 4. | வருகுணகிருபை ... | கீரவாணி—ரூபகம் ... | வாமுலசகி ... | 85 |

## தேவாரம்


| லக். | பாட்டு முதற்குறி. | இராக—தாளம். | பக்கம். |
| --- | --- | --- | --- |
| 1. | கல்லார்க்கும் ... | குறிஞ்சி—ஆதி ... ... ... | 122 |
| 2. | சத்தாய்நிஷ்கள ... | சங்கராபரணம்—ரூபகம் ... ... ... | 121 |
| 3. | நின்னடிக்கன்பு ... | நீலாம்பரி—ஆதி ... ... ... | 124 |
| 4. | பரனே பரப்பொருளே ... | சுருட்டி—ரூபகம் ... ... ... | 117 |
| 5. | மன்னுயிர்த் தொகுதி ... | காம்போதி—திரிபுடை ... ... ... | 119 |
| 6. | முத்திநெறி ... | ஆரபி—ஆதி ... ... ... | 53 |


## திருப்புகழ்


| லக். | பாட்டு முதற்குறி. | இராக-தாளம். | பக்கம். |
| --- | --- | --- | --- |
| 1. | ஆடுகெளுக்காயுயிரை ... | கேதாரகௌளம்—கண்டஜாதி ஏகம் ... ... | 126 |
| 2. | நிலவுலகின்பப் பெருக்கிலே... | ஹுசேனி—ஆதி ... ... ... | 125 |


## காவடிச்சிந்து முதலியன


| லக். | பாட்டு முதற்குறி. | இராக-தாளம். | பக்கம். |
| --- | --- | --- | --- |
| 1. | சாலேம் மாநகர் ... | செஞ்சுருட்டி—சாபு ... ... ... | 111 |
| 2. | பொன்னுலகந்தன்னை ... | செஞ்சுருட்டி—சாபு ... ... ... | 113 |
| 3. | பாவஞ் செய்யாதிரு ... | நாதநாமக்ரிய—சாபு ... ... ... | 116 |

**Correction slip for page 24.**

## இராகச் சுருதி

| | | |
|---|---|---|
| 1. | ஜனுமத்தோடி | ரி♭ க ம த♭ நி |
| 2. | மாயாமாளவகௌளம் | ரி♭ க♯ ம த♭ நி♯ |
| 3. | சக்ரவாகம் | ரி♭ க♯ ம த நி |
| 4. | நடபைரவி | ரி க ம த♭ நி |
| 5. | கரஹரப்பிரியா | ரி க ம த நி |
| 6. | கௌரிமனோஹரி | ரி க ம த நி♯ |
| 7. | ஹரிகாம்போதி | ரி க♯ ம த நி |
| 8. | சரசாங்கி | ரி க♯ ம த♭ நி♯ |
| 9. | தீரசங்கராபரணம் | ரி க♯ ம த நி♯ |
| 10. | கமனஸ்ரம | ரி♭ க♯ ம♯ த நி♯ |
| 11. | மேசகல்யாணி | ரி க♯ ம♯ த நி♯ |

# PRIMER OF KARNATIC MUSIC

# கர்நாடக சங்கீத வித்தியா போதினி

---

## அத்தியாயம் 1.

### SWARAS AND SRUTIS—சுரங்களும் சுருதிகளும்

சங்கீதத்துக்கு சுரம், இராகம், தாளம் என்று மூன்று அங்கங்களுண்டு. அவைகளை மாணவர் தெளிவாயறியும்பொருட்டு அடியில் விவரித்தெழுதுகிறோம்:

1. சுரம். ஸ்வரம் அல்லது சுரம் என்கிற பதத்துக்கு இயற்கையாகவே செவிக்கின்பந்தரும் சப்தம் என்று பொருள். நமது காதுகளில் பலவித சப்தங்கள் விழுகின்றன. அவையெல்லாம் நமக்கு இன்பந்தருவன அல்ல. இன்பந்தருகிற சப்தம் எதுவோ அது சுர மென்னப்படும்.

2. சுரத்தொகை. இந்தச் சுரங்கள் ஏழாகும். அவை ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் எனப் பெயரிடப்பட்டிருக்கின்றன.

3. சுர நாமகரணம். சுரங்களுக்கு ஏன் இப்பெயர்கள் வந்தன? முன்னோர் சில காரணங்களைக் கூறியிருக்கின்றனர். ஷட்ஜம் என்றால் ஆறிலிருந்து பிறப்பது என்றனர். அது ஆறு சுரங்களிலிருந்து பிறந்ததென்றாவது, இதினின்று ஆறு சுரங்களும் பிறந்ததென்றாவது பொருட்படுமென்பர். ரிஷபம், ரிஷபத்தின் கூச்சலை யொத்தது என்றும்; காந்தாரம், காந்தார நாட்டுக்குரிய சுரம் என்றும்; மத்யமம், சுரங்களின் மத்திய ஸ்தானத்தையுடையது

என்றும்; பஞ்சமம், ஐந்தாம் ஸ்தானத்தையுடையது என்றும்; தைவதம், நாபி முதலிய ஸ்தானங்களைத் தழுவி வருவது என்றும்; நிஷாதம், ஷட்ஜ முதல் ஆறு சுரங்களையும் தன்னிடந் தழுவப் பெற்றது என்றும் பொருட்படுத்திக் கூறினர்.

4. சுரக்குறிகள். ஏழு சுரங்களையுஞ் சுலபமா யுச்சரிப்பதற் குதவியா யிருக்கும்பொருட்டு இவைகளுக்குச் சுரக்குறிகளேற்பட் டிருக்கின்றன. அவை ச ரி க ம ப த நி என்னப்படும். பொதுவா யிவைகளே சுரங்களென்னப்படுகின்றன.

5. சுர பேதங்கள். சுரங்களில் பிரகிருதியென்றும், விக்ருதி யென்றும் இரண்டு பேதங்களேற்பட்டிருக்கின்றன. பிரகிருதி யென்றால் சப்தத்தில் பேதமில்லாதவையென்றும், விக்ருதியென் றால் பேதமுள்ளவையென்றும் பொருட்படும். ஏழு சுரங்களுள் ச ப இரண்டும் பிரகிருதி சுரங்கள். இவை சப்தத்தில் பேதமடை வதில்லை. ரி க ம த நி ஆகிய ஐந்தும் விக்ருதி சுரங்கள். இவை வித்தியாசமான சப்தங்களை யடைகின்றன. இஃது எப்படி? கூறு வோம்.

ரிஷபத்துக்கு இரண்டுபேதம், காந்தாரத்துக்கு இரண்டுபேதம், மத்யமத்துக்கு இரண்டுபேதம், தைவதத்துக்கு இரண்டுபேதம், நிஷாதத்துக்கு இரண்டுபேதம், ஆக ஐந்து விக்ருதி சுரங்களுக்கும் பத்து பேதங்களுண்டு. இந்தப் பத்தும், விக்ருதி சுரங்களிரண் டுஞ்சேர்ந்து மொத்தம் பன்னிரண்டு சுரபேதங்களேற்பட்டிருக்கின் றன *[1]. இன்னொருவிதமாய்ச் சொன்னால் ஏழு சுரங்களுக்கும் பன் னிரு வித்தியாசமான சப்தங்களுண்டெனக. இந்தப் பன்னிரண்டு சப்தங்களும் பன்னிரண்டு சுருதிகளென்னப்படும். அவற்றின் விவரத்தை அடியிற் காண்க.

---

*[1] குறிப்பு. சங்கீத சாஸ்திரத்தின்படி ரிஷபம், காந்தாரம், தைவதம், நிஷாதம் ஆகிய நான்கு சுரங்களுக்கும் மும்மூன்று பேதங்கள் கொடுத்து மொத்தம் பதினாறு சுருதிகளேற்பட்டிருக் கின்றன. ஆனால் அந்தப் பதினாறில் நான்கு சுருதிகள் மற்றப் பன் னிரண்டினுள்ளடங்கிச் சப்தங்கள் பன்னிரண்டே யேற்பட்டிருப்ப தால், அந்த நான்கையும் தவிர்த்துப் பன்னிரு சுருதிகளையே இங்கு குறிப்பிட்டோம். பதினாறு சுருதிகளின் விவரத்தை அனு பந்தத்தில் காண்க.

## 12 SRUTIS—பன்னிரு சுருதிகள் * [2]

| லக் | சுரப் பெயர் | சுரக் குறி | இங்கிலிஷ் நோட் | வேறு பெயர் |
|---|---|---|---|---|
| 1 | ஷட்ஜம் | ஸ | C | ஷட்ஜம் |
| 2 | சுத்த ரிஷபம் | சு. ரி = ரி♭ | D♭ | கோமள ரிஷபம் |
| 3 | சதுஸ்ருதி ரிஷபம் | ச. ரி = ரி | D | ரிஷபம் |
| 4 | சாதாரண காந்தாரம் | சா. கா = க | E♭ | காந்தாரம் |
| 5 | அந்தர காந்தாரம் | அ. கா = க# | E | தீவிர காந்தாரம் |
| 6 | சுத்த மத்யமம் | சு. ம = ம | F | மத்யமம் |
| 7 | பிரதி மத்யமம் | பி. ம = ம# | F# | தீவிர மத்யமம் |
| 8 | பஞ்சமம் | ப | G | பஞ்சமம் |
| 9 | சுத்த தைவதம் | சு. த. த♭ | A♭ | கோமள தைவதம் |
| 10 | சதுஸ்ருதி தைவதம் | ச. த = த | A | தைவதம் |
| 11 | கைசிகி நிஷாதம் | கை. நி = நி | B♭ | நிஷாதம் |
| 12 | காகலி நிஷாதம் | கா. நி = நி# | B | தீவிர நிஷாதம் |

* [2] கோமளம் தீவிரம் என்ற சொற்கள் வடநாட்டு ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் வழங்குபவைகள். கோமளம் தாழ்ந்த சுருதியையும் தீவிரம் உயர்ந்த சுருதியையுங் குறிக்கும். இதிற் சில சுரங்களுக்குக் கோமள சுருதிகளில்லை என்று கவனிக்கலாம். கோமள காந்தாரம் சுத்தகாந்தாரமும், கோமள நிஷாதம் சுத்த நிஷாதமுமாயிருக்கும். இவ்விரண்டும் மற்றச் சுருதிகளுக் கொத்திருத்தலின் அவைகளைச் சேர்க்கவில்லை. அதுபோல தீவிர ரிஷபமும் தைவதமும் இல்லை.

6. **சுரஸ்தானங்கள்.** வாத்திய கருவிகளிலே தற்காலம் அதிகமாக உபயோகிக்கப்பட்டு வருகிற ஹார்மோனியத்தில் இந்தச் சுருதி ஸ்தானங்கள் இடது பக்கத்திலிருந்து வலது பக்கமாய் வரிசையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. முதல் பன்னிரண்டு கட்டைகளுக்குள் பன்னிரு சுருதிகளும் அடங்கியிருக்கின்றன. வீணை, சித்தார் முதலிய கருவிகளிலும் இதே ஒழுங்கை யனுசரித்து மெட்டுகளைக்கொண்டு சுரஸ்தானங்களமைக்கப்பட்டிருக்கின்றன. பிடில் என்கிற வாத்திய கருவியில் சுர சப்தத்தைக்கொண்டு ஸ்தானங்களை நாமே அமைத்துக்கொள்ளவேண்டும். வாத்திய கருவிகளில் சுரஸ்தானங்களைக் காட்டும் சக்கரத்தை அடியிற் காண்க.

## வீணை அல்லது ஹார்மோனியத்தில் பன்னிரு ஸ்தானங்கள்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச | சு. ரி<br>ரி♭ | ச. ரி<br>ரி | சா. க<br>க | அ க<br>க♯ | சு. ம<br>ம | பி. ம<br>ம♯ | ப | சு. த<br>த♭ | ச. த<br>த | கை. நி<br>நி | கா. நி<br>நி♯ |

7. **சுரஸ்தாயிகள்.** வாத்திய கருவிகளிலேற்பட்டிருக்கிற சுருதிகளின் அமைப்புக்கு ஸ்தாயிகள் (Octaves) என்று பெயர். ஷட்ஜம் முதல் நிஷாதம் வரையில் 12 சுருதிகளையுங் கொண்டது ஒரு ஸ்தாயி. சகல வாத்திய கருவிகளிலும் இவ்வித ஸ்தாயிகள் மூன்று அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு மந்தரம், மத்தியம், தாரம் அல்லது ஹெச்சு என்று பெயர். இவை முறையே கனத்த குரலிலும் மத்திம குரலிலும் உச்சக்குரலிலும் பாடுவதற்கேதுவாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஹார்மோனியத்தில் இடதுபுறத்திலிருந்து முதல் 12 கட்டைகள் மந்தரம். மத்தியிலிருந்து 12 கட்டைகள் மத்தியம். வலது புறத்தில் மற்றப் பன்னிரு கட்டைகள் ஹெச்சு. பிடில் (Fiddle) நான்காம் மூன்றும் தந்திகளில் மந்தரமும், இரண்டாம் முதலாந் தந்திகளில் மத்தியமும், முதலாந் தந்தியில் நிஷாதத்துக்குமேல் ஹெச்சும் அமைந்திருக்கிறது. இப்புஸ்தகத்தில் மந்தரஸ்தாயி சுரங்களைக் கீழ்ப் புள்ளிகளுடனும், மத்தியஸ்தாயி சுரங்களைப்

புள்ளிகளின்றியும் ஹெச்சு ஸ்தாயி சுரங்களை மேற்புள்ளிகளுடனும் குறித்திருக்கிறோம். அடியிற் காண்க.

## மூன்று ஸ்தாயி சுரங்கள்

| மந்தரம் | மத்தியம் | தாரம் அல்லது ஹெச்சு |
|---|---|---|
| ச ரி க ம ப த நி | ச ரி க ம ப த நி | ச ரி க ம ப த நி |

8. இராகச் சுருதிகள். (Key-notes) இம்மட்டும் எழு சுரங்களையும், அவைகளின் விகற்பமான பன்னிரு சுருதிகளையும், வாத்திய கருவிகளில் அவற்றின் தொனியைப் பிறப்பிக்கும் ஸ்தானங்களையுங் கூறினோம். இப்போது இந்தச் சுருதிகள் இராகங்களைப் பிறப்பிக்கிற இராகச் சுருதிகளாவது எவ்விதம் என்றெடுத்துக் காட்டுவோம். ஷட்ஜ முதல் நிஷாதம் ஈறாயுள்ள பன்னிரு சுருதிகளில் சுருதிகள் ஐந்தாகவும், ஆறாகவும், எழாகவுஞ் சேர்ந்து இராகங்களை உற்பத்தி செய்கின்றன. யாதாமொரு இராகத்தை யுற்பத்திசெய்யுஞ் சுருதிகளெவைகளோ அவைகள் இராகச் சுருதிகள் என்னப்படும். இதை விளக்குவோம்.

ச ரி ♭ ரி க க ♯ ம ம ♯ ப த ♭ த நி நி ♯ என்கிற பன்னிரு சுருதிகளில் ச ரி♭ க ♯ ம ப த♭ நி ♯ என்னும் எழு சுருதிகளைத் தெரிந்தெடுத்து வாத்திய கருவிகளில் தொனிக்கச் செய்தால் மாயாமாளவ கௌளம் என்கிற இராகம் பிறக்கிறது. அவ்விதமே ச ரி க♯ ம ப த நி♯ என்னும் எழு சுருதிகளை யெடுத்துத் தொனிக்கச் செய்தால் தீரசங்கராபரணம் என்கிற இராகமுண்டாகிறது. இவ்வாறு இப் பன்னிரு சுருதிகளிலிருந்து அநந்த இராகங்களைப் பிறப்பிக்கலாம். இதைக் குறித்து இராக அத்தியாயத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்படும். இங்கே இராகச் சுருதிகள் இன்னதென்பதை மட்டும் காட்டும் பொருட்டு இதைக் கூறினோம். அந்தந்த இராகத்தின் இராகச் சுருதிகள் ( ) இவ்வித திப்பணத்துக்குள் காட்டப்படும். அவற்றுள் ச ப இரண்டு மிராது. அவை பிரகிருதி சுரங்களானதால் அவைகளை எல்லா விக்ருதி சுரங்களோடுஞ் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

## EXERCISES IN SRUTIS

### சரளி வரிசைகள்

சுருதிகளின் அடுக்குக்குச் சரளி வரிசைகளென்று பெயர். இந்தச் சரளி வரிசைகள் யாதாமொரு இராகத்தின் சுருதிகளிலேயே அமைந்திருக்கும். அந்தந்த இராகச் சுருதிகள் மனதிலழுந்தும்படியாக, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வரிசைகளை மாணவர் வாயினாற் பாடியோ, வாத்திய கருவிகளில் வாசித்தோ, அப்பியாசஞ் செய்யவேண்டியது.

## அப்பியாசம் 1.

இராகம்: மாயாமாளவகௌளம். (ரி♭ க# ம த♭ நி#)

தாளம்: ஆதி. $\frac{4, 2, 2}{8}$ *

1. | ச ரி க ம | ப த | நி ச் || ச் நி த ப | ம க | ரி ச ||

2. | ச ரி க ம | ச ரி | க ம || ச ரி க ம | ப த | நி ச் ||
| ச் நி த ப | ச் நி | த ப || ச் நி த ப | ம க | ரி ச ||

3. | ச ரி க ம | ச ரி | ச ரி || ச ரி க ம | ப த | நி ச் ||
| ச் நி த ப | ச் நி | ச் நி || ச் நி த ப | ம க | ரி ச ||

4. | ச ரி க ம | பா | பா || ச ரி க ம | ப த | நி ச் ||
| ச் நி த ப | மா | மா || ச் நி த ப | ம க | ரி ச ||

5. | ச ரி க ம | பா | சரி || ச ரி க ம | ப த | நி ச் ||
| ச் நி த ப | மா | ச்நி || ச் நி த ப | ம க | ரி ச ||

---

* **ஆதிதாளம்**, மாணுக்கருடைய ஆரம்ப அப்பியாசத்துக்குரிய தாளமாயிருப்பதால் அப்பெயர் பெற்றது. இதன் விவரத்தைத் தாள அதிகாரத்தில் காண்க.

6. | ச ரி க ம | ப ம | க ரி || ச ரி க ம | ப த | நி ச் ||
| ச் நி த ப | ம ப | த நி || ச் நி த ப | ம க | ரி ச ||

7. | ச ரி க ம | ப ம | த ப || ச ரி க ம | ப த | நி ச் ||
| ச் நி த ப | ம ப | க ம || ச் நி த ப | ம க | ரி ச ||

8. | ச ரி க ச | ரி க | ச ரி || ச ரி க ம | ப த | நி ச் ||
| ச் நி த ச் | நி த | ச் நி || ச் நி த ப | ம க | ரி ச ||

9. | ச ரி க ம | ரி க | ம ப || ச ரி க ம | ப த | நி ச் ||
| ச் நி த ப | நி த | ப ம || ச் நி த ப | ம க | ரி ச ||

## அப்பியாசம் 2.

### *a*. பல்லவி வரிசைகள்

1. | ச ரி க ம | பா | க ம || பா . . | பா | . . ||
| க ம ப த | நி த | ப ம || க ம ப க | ம க | ரி ச ||
| க ம க ம | ப ம | ப த || ம த ப ப | ம க | ரி ச ||

2. | ச ரி க ம | பா | க ம || பா . . | பா | . . ||
| ம ப த ப | த நி | த ப || ம ப த ப | ம க | ரி ச ||

3. | ச ரி க ம | பா | க ம || பா . . | பா | . . ||
| ப த நி த | நி ச் | நி த || ப த நி த | ப ம | க ரி ||

4. | ச ரி க ம | பா | க ம || பா . . | பா | . . ||
| ச்ா நி த | நீ | த ப || தா ப ம | பா | பா ||
| க ம ப த | நி த | ப ம || க ம ப க | ம க | ரி ச ||

5. | ச ரி க ரி | கா | க ம || ப ம பா | த ப | தா ||
| ம ப த ப | த நி | த ப || ம , , த , , | ம க | ரி ச ||

6. | ச ரி க ம | பா | பா || த த பா | ம ம | பா ||
| த நி ச்ா | ச் நி | த ப || ச் நி த ப | ம க | ரி ச ||

### *b*. மேல்ஸ்தாயி பல்லவி வரிசைகள்

1. | ச ரி க ம | ப த | நி ச் || ச்ா . . | ச்ா | . . ||
| த நி ச் ரி | ச் நி | த ப || ச் நி , , | ம க | ரி ச ||

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | ச ரி க ம | ப த | நி ச் ‖ | ச் ா . . | ச் ா | . . ‖ |
| | த நி ச் ரி | ச் ச் | நி ச் ‖ | ச் ரி ச் நி | த ப | ம ப ‖ |
| | த நி ச் ரி | ச் நி | த ப ‖ | ச் நி த ப | ம க | ரி ச ‖ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | ச ரி க ம | ப த | நி ச் ‖ | ச் ா . . | ச் ா | . . ‖ |
| | த நி ச் ரி | க் ரி | ச் ரி ‖ | ச் ரி ச் நி | த ப | ம ப ‖ |
| | த நி ச் ரி | ச் ச் | ரி ச் ‖ | ச் ரி ச் நி | த ப | ம ப ‖ |
| | த நி ச் ரி | ச் நி | த ப ‖ | ச் நி த ப | ம க | ரி ச ‖ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | ச ரி க ம | ப த | நி ச் ‖ | ச் ா . . | ச் ா | . . ‖ |
| | த நி ச் ரி | க் ம் | க் ரி ‖ | ச் ரி ச் நி | த ப | ம ப ‖ |
| | த நி ச் ரி | க் ரி | ச் ரி ‖ | ச் ரி நி ச் | த ப | ம ப ‖ |
| | த நி ச் ரி | ச் ச் | ரி ச் ‖ | ச் ரி ச் நி | த ப | ம ப ‖ |
| | த நி ச் ரி | ச் நி | த ப ‖ | ச் நி த ப | ம க | ரி ச ‖ |

# அப்பியாசம் 3.

## ஜண்டை வரிசைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சச | ரிரி | கக | மம | பப | தத | நிநி | ச்ச் ‖ |
| | ச்ச் | நிநி | தத | பப | மம | கக | ரிரி | சச ‖ |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2. | சச | ரிரி | கக | மம | ரிரி | கக | மம | பப ‖ |
| | கக | மம | பப | தத | மம | பப | தத | நிநி ‖ |
| | பப | தத | நிநி | ச்ச் | ச்ச் | நிநி | தத | பப ‖ |
| | நிநி | தத | பப | மம | தத | பப | மம | கக ‖ |
| | பப | மம | கக | ரிரி | மம | கக | ரிரி | சச ‖ |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3. | சச | ரிரி | கக | ரிரி | சச | ரிரி | கக | மம ‖ |
| | ரிரி | கக | மம | கக | ரிரி | கச | மம | பப ‖ |
| | கக | மம | பப | மம | கக | மம | பப | தத ‖ |
| | மம | பப | தத | பப | மம | பப | தத | நிநி ‖ |
| | பப | தத | நிநி | தத | பப | தத | நிநி | ச்ச் ‖ |
| | ச்ச | நிநி | தத | பப | நிநி | கக | பப | தத ‖ |
| | நிநி | தத | பப | தத | நிநி | தத | பப | [illegible] ‖ |
| | தத | பப | மம | பப | தத | [illegible] | மம | கக ‖ |
| | பப | மம | கக | மம | பப | மம | கக | ரிரி ‖ |
| | மம | கக | ரிரி | கக | மம | கக | ரிரி | சச ‖ |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | சாச ரீரி கக | சச ரிரி | கக மம | ‖ |
| | ரீரி காக மம | ரிரி கக | மம பப | ‖ |
| | காக மாம பப | கக மம | பப தத | ‖ |
| | மாம பாப தத | மம பப | தத நிநி | ‖ |
| | பாப தாத நிநி | பப தத | நிநி ச்ச் | ‖ |
| | ச்ாச் நீநி தத | ச்ச் நிநி | தத பப | ‖ |
| | நீநி தாத பப | நிநி தத | பப மம | ‖ |
| | தாத பாப மம | தத பப | மம கக | ‖ |
| | பாப மாம கக | பப மம | கக ரிரி | ‖ |
| | மாம காக ரிரி | மம கக | ரிரி சச | ‖ |
| 5. | சசச ரிரிரி கக | சச ரிரி | கக மம | ‖ |
| | ரிரிரி ககக மம | ரிரி கக | மம பப | ‖ |
| | ககக மமம பப | கக மம | பப தத | ‖ |
| | மமம பபப தத | மம பப | தத நிநி | ‖ |
| | பபப ததத நிநி | பப தத | நிநி ச்ச் | ‖ |
| | ச்ச்ச் நிநிநி தத | ச்ச் நிநி | தத பப | ‖ |
| | நிநிநி ததத பப | நிநி தத | பப மம | ‖ |
| | ததத பபப மம | தத பப | மம கக | ‖ |
| | பபப மமம கக | பப மம | கக ரிரி | ‖ |
| | மமம ககக ரிரி | மம கக | ரிரி சச | ‖ |
| 6. | சசசச ரிரிரிரி | கககக | மமமம | ‖ |
| | ரிரிரிரி கககக | மமமம | பபபப | ‖ |
| | கககக மமமம | பபபப | தததத | ‖ |
| | மமமம பபபப | தததத | நிநிநிநி | ‖ |
| | பபபப தததத | நிநிநிநி | ச்ச்ச்ச் | ‖ |
| | ச்ச்ச்ச் நிநிநிநி | தததத | பபபப | ‖ |
| | நிநிநிநி தததத | பபபப | மமமம | ‖ |
| | தததத பபபப | மமமம | கககக | ‖ |
| | பபபப மமமம | கககக | ரிரிரிரி | ‖ |
| | மமமம கககக | ரிரிரிரி | சசசச | ‖ |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | சசரிரிக சரிக | சசரிரி | ககமம | ‖ |
| | ரிரிககம ரிகம | ரிரிகக | மமபப | ‖ |
| | ககமமப கமப | ககமம | பபதத | ‖ |
| | மமபபத மபத | மபபப | ததநிநி | ‖ |
| | பபததநி பதநி | பபதத | நிநிச்ச் | ‖ |
| | ச்ச்நிநித ச்நித | ச்ச்நிநி | ததபப | ‖ |
| | நிநிததப நிதப | நிநிதத | பபமம | ‖ |
| | ததபபம தபம | ததபப | மமகக | ‖ |
| | பபமமக பமக | பபமம | ககரிரி | ‖ |
| | மமககரி மகரி | மமகக | ரிரிசச | ‖ |

## அப்பியாசம் 4.

## தாட்டு வரிசைகள்

இ-ம். தீரசங்கராபரணம் (ரி க# ம த நி#) தாளம் $\frac{4, 2, 2}{8}$.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மகரிக சரிகம | பமகம | ரிகமப | ‖ |
| | தபமப கமபத | நிதபத | மபதநி | ‖ |
| | ச்நிதநி பதநிச் | பதநித | ச்நிதப | ‖ |
| | மபதப நிதபம | கமபம | தபமக | ‖ |
| | ரிகமக பமகரி | சரிகரி | மகரிச | ‖ |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | சமகம ரிகசரி | சகரிக | சரிகம | ‖ |
| | ரிபமப கமரிக | ரிமகம | ரிகமப | ‖ |
| | கதபத மபகம | கபமப | கமபத | ‖ |
| | மநிதநி பதமப | மதபத | மபதநி | ‖ |
| | பச்நிச் தநிபத | பநிதநி | பதநிச் | ‖ |
| | ச்பதப நிதச்நி | ச்தநித | ச்நிதப | ‖ |
| | நிமபம தபநித | நிபதப | நிதபம | ‖ |
| | தகமக பமதப | தமபம | தபமக | ‖ |
| | பரிகரி பமதப | பகமக | பமகரி | ‖ |
| | மசரிச கரிகம | மரிகரி | மகரிச | ‖ |

# அத்தியாயம் 2.

## TALA—TIME MEASURE

### தாளம்

ஒரு கையோடு மற்றொரு கையை அடிப்பதினாலுண்டாகும் சப்தத்தினாலும், அதை மீளவும் பிரிப்பதினாலும் உண்டாகும் செய்கை தாளம் என்னப்படும். அது கீதங்களின் நடையையும் கால அளவையுந் திட்டப்படுத்துகிறது.

1. **ஏழுதாளங்கள்.** சுரங்கள் எப்படி ஏழோ அதேபோல தாளங்களும் ஏழாகும். அவை: துருவம், மட்டியம், ரூபகம், ஜம்பை, திரிபுடை, அட, ஏகம் என்பவையாம்.

2. **தாள பேதங்கள்.** மேற்சொன்ன ஏழு தாளங்களில் ஒவ்வொன்றுக்கும் சதுஸ்ரம், திஸ்ரம், மிஸ்ரம், கண்டம், சங்கீரணம் என்று ஐந்து ஜாதிகளுண்டு. ஆகையால் ஜாதிபேதத்தால் தாளங்கள் 35 ஆகின்றன. இவைகளின் விவரத்தை அனுபந்தத்தில் காண்க.

3. **தாளப்பிரமாணம்.** தாளங்களைக் கணிப்பதற்குப் பத்து வித பிரமாணங்களிருக்கின்றன. அவற்றின் விவரம் அனுபந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது. இங்கே அவைகளில் முக்கியமான மூன்றைமட்டும் கூறுகிறோம். அவையாவன: (1) அக்ஷரகாலம் (2) அங்கம் (3) ஜாதி. இந்த மூன்றையும் விவரித்துக் காண்பிப்போம்.

(1) **அக்ஷர காலம்.** ஒவ்வொரு தாளமும் இத்தனை அக்ஷர காலமுடையதென்று ஒரு கணக்கேற்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கில் ஒரு எண் ஒரு அக்ஷர காலமாகும். உதாரணமாக, சரி க ம ப த நி ச் என்கிற எட்டு சுரங்கள் சேர்ந்து ஆதிதாளத்துக்குரிய எட்டு அக்ஷரகாலங்களுக்கு நிற்கும்போது ஒவ்வொரு சுரமும் ஒரு அக்ஷரகாலமாகும். அக்ஷரகாலத்தில் காலத்தையனுசரித்து சுரங்கள் இரண்டுக்கு மேற்பட்டு வரும்போது அவை களைகளென்று பெயர் பெறும்.

(2) **அங்கம்.** இது தாளத்தின் உட்பிரிவைக் காட்டுவது. ஆறுவகை அங்கங்களுண்டு. அவைகளில் முக்கியமான மூன்றை மட்டும் எடுத்துக்கொண்டு விவரிப்போம். மற்றவைகளை அனுபந்தத்தில் காண்க.

அனுதுருதம், துருதம், லகு என்கிற அந்த மூன்று முக்கிய அங்கங்களின் விவரம் வருமாறு :—

(a) அனுதுருதம். இது மேலே கூறப்பட்ட அக்ஷரகாலத்தில் ஒன்றைக் குறிக்கும். அதாவது, தாளத்தின் ஒவ்வொரு அக்ஷரகாலமும் அனுதுருதம் என்னப்படும். உதாரணம்: மேற்சொன்ன எட்டு சுரங்களில் ச அனுதுருதம். இதைக் குறியினால் எழுதும்போது ◡ இவ்விதம் பிறைபோ லெழுதப்படுகிறது.

(b) துருதம். இது இரண்டு அக்ஷரகாலங் கொண்டது. (உ-ம்.) ச ரி. இதற்குக் குறி சந்திரன் = O.

(c) இலகு. இது மேலே சொல்லப்பட்ட ஐந்து ஜாதிகளையும் அனுசரித்து முறையே 4, 3, 7, 5, 9 அக்ஷர காலங்களுடைய தாகும். (உ-ம்.) சரிகம ழி. அடியில் வரும் சக்கரத்தில் காண்க. இதற்குக் குறி குறுந்தடி. = |

(3) ஜாதி. இது ஐந்து வகைப்படும். இந்த ஜாதிகள் இலகுவிற்கு மாத்திரமுண்டு. ஜாதிகளின் பெயர்களையும் அவற்றின் அக்ஷரகால தொகையையும் அடியிற் காண்க.

| எண் | ஜாதிகளின் பெயர் | அக்ஷர காலம் | உதாரணம் |
|---|---|---|---|
| 1 | சதுஸ்ரம் | 4 | ச ரி க ம |
| 2 | திஸ்ரம் | 3 | ச ரி க |
| 3 | மிஸ்ரம் | 7 | ச ரி க ச ரி க ம |
| 4 | கண்டம் | 5 | ச ரி ச ரி க |
| 5 | சங்கீரணம் | 9 | ச ரி ச ரி க ச ரி க ம |

4. தாளம்போடுங் கிரமம். இதுவரையில் தாளவிஷயமாய் முக்கியமாக அறியவேண்டிய அக்ஷரகாலம், அங்கம், ஜாதி இவைகளைக்குறித்துச் சொன்னோம். இனி கையால் தாளம்போடுங் கிரமத்தைச் சொல்லுவோம்.

தாளம்போடுங் கிரமமாவது அனுதுருதத்தை ஒரு அடியினாலும், துருதத்தை ஒரு அடி ஒரு கை வீசுதலினாலும், இலகுவை ஜாதியை யனுசரித்து 3, 2, 6, 4, 8 விரல் எண்ணிக்கையினாலும் காண்பிப்பதாம். இதை அடியிற்கண்ட உதாரணத்தால் விளக்குவோம். கீழே வரையப்பட்டிருக்கிற ஆதிதாளம்: இலகு, துருதம்,

துருதம் என மூன்று அங்கங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இலகுவில் நான்கு அக்ஷரகாலங்களிருக்கின்றன. இவைகளை, வலது கையை இடதுகைமேல் அல்லது தொடையின்மேல் அடித்து முதலாம் அக்ஷர காலத்தை யாரம்பித்து மற்ற மூன்று அக்ஷரகாலங்களையும் சுண்டுவிரலிலிருந்து மூன்று விரல்களை விட்டெண்ணவேண்டும். மற்ற இரண்டு துருதங்களையும் முறையே ஒரு அடி அடித்துக் கையை அப்பால் வீசவேண்டும். அவ்வாறு செய்யும்போது 1, 5, 7-ம் அக்ஷரங்களில் அடியும், 6, 8-ம் அக்ஷரங்களில் கை வீசுதலும் 2, 3, 4-ம் அக்ஷரங்களில் விரல் எண்ணிக்கையும் வரும்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (உ-ம்.) | × | 2 | 3 | 4 | | × | 6 | | × | 8 | |
| | ச | ரி | க | ம | \| | ப | த | \| | நி | ச் | ‖ |

× இக்குறி அடிவிழும் இடங்கள். 2, 3, 4 இவ்வெண்கள் விரலால் எண்ணவேண்டிய இடங்கள். 6, 8 எண்கள் கையை வீசவேண்டிய இடங்கள் என்றறிக.

5. **தாளவிவரம்.** இப்புஸ்தகத்தில் தாளங்கள் எழுதப்பட்டிருக்கும் வகையைக்குறித்துச் சில வார்த்தைகளைச் சொல்லுவது அவசியமாகும். முதலிலுள்ள நெடுங்கோட்டுக்கும் இறுதியிலுள்ள இரட்டைக் கோட்டுக்குமிடையில் தாளத்தின் மொத்த அக்ஷரகாலங்கள் அடங்கியிருக்கின்றன. நடுவிலுள்ள இரண்டு குறுகின கோடுகள் தாள அங்கங்களைப் பிரித்து இலகு, துருதம், துருதம் என்று காண்பிக்கின்றன. பிரதி அங்கத்துக்கு மிடையில் இடைவிட்டு எழுதப்பட்டிருக்கும் சுரங்கள் அக்ஷரகாலங்களைக் காட்டுகின்றன. இதைச் சுருக்கத்திலெளியித்தம் எண்களால் எழுதும்போது $\frac{4, 2, 2}{8}$ என்று எழுதுகிறோம். இங்கே மேலேயுள்ள எண்கள் அங்கங்களையும், கீழெண் மொத்த அக்ஷரகாலத்தொகையையுங் காண்பிக்கிறது. இந்தப்படி ஆதிதாளத்துக்கு மொத்த அக்ஷரகாலம் 8 என்றும், அது இலகு, துருதம், துருதம் என மூன்று அங்கங்களுடையதென்றும், இலகுவின் அக்ஷரகாலங்கள் நாலாயிருப்பதனால் அது சதுஸ்ர ஜாதியைச் சேர்ந்ததென்றும் தெளிவாய் விளக்கப்படுகிறது. எழு தாளங்களும் அவற்றின் ஜாதிபேதத்தாலான 35 தாளங்களும இம்மாதிரி வகையாய் எழுதப்பட்டிருப்பதை அனுபந்தத்திற் காண்க. ஒரு தாளத்தின் அறுதிக்கு ஆவர்த்தனம் என்று பெயர். இது ‖ இவ்வித இரட்டைக் கோடுகளால் காட்டப்பட்டிருக்கிறது.

6. **முக்கியமான தாளங்கள்.** மேலே சொல்லப்பட்ட 35 தாளங்களில் சில மாத்திரம் வழக்கத்திலிருக்கின்றன. அவைகளிற் சிலவற்றைக் கூறுகிறோம்.

(1) ரூபகதாளம். இது இரண்டு அங்கங்களுடையது: அவை துருதம், லகு என்பன. இதில் இரண்டு தாளங்களை மாத்திரம் கூறுவோம்.

*a.* சதுஸ்ர ரூபகம். இதற்கு துருதத்துக்கு அக்ஷரகாலம் 2. லகு சதுஸ்ர ஜாதியாயிருப்பதால் அதற்கு 4. ஆக அக்ஷரகாலம் 6. அதை இப்புஸ்தகத்தில் $\frac{2+4}{6}$ இவ்விதமாயெழுதுகிறோம். இதன் விவரத்தை 5-ம் பத்தியிற் காண்க. இந்தத் தாளமே பொதுவாய் ரூபகதாளம் என்னப்படுகிறது. (உ-ம்) | சரி | சரிகம ||

*b.* திஸ்ர ரூபகம். இதற்கு துருத அக்ஷரகாலம் 2. திஸ்ரஜாதி லகுவுக்கு 3. மொத்த அக்ஷரகாலம் 5. அதை $\frac{2+3}{5}$ என்று எழுதுகிறோம். (உ-ம்) | சரி | கசரி ||

(2) ஜம்பை தாளம். இது மூன்று அங்கங்களுடையது: அவை லகு, அனுதுருதம், துருதம் என்பன. மிஸ்ரஜாதி ஜம்பை தாளமே பொதுவாய் ஜம்பைதாளம் என்னப்படுகிறது. ஆகவே அதற்கு மொத்த அக்ஷரகாலம் 10. அதை $\frac{7+1+2}{10}$ என்று எழுதுகிறோம். (உ-ம்.) | ச ரி கா ரீ | ச | ரி க ||

(3) திரிபுடை தாளம். இது மூன்று அங்கங்களுடையது: அவை லகு, துருதம், துருதம் என்பன. இதில் இரண்டு தாளங்களை மட்டும் கூறுவோம்.

*a.* சதுஸ்ர திரிபுடை. சதுஸ்ரஜாதி லகுவுக்கு அக்ஷரகாலம் 4. துருதம் 2. இன்னொரு துருதம் 2. ஆக மொத்த அக்ஷரகாலம் 8. அதை $\frac{4+2+2}{8}$ என்று எழுதுகிறோம். இந்தத் தாளமே பொதுவாய் ஆதிதாளமென்று வழங்கப்படுகிறது. இது பெரும்பான்மை ...உபயோகமாகிற தாளம். (உ-ம்.) | ச ரி க ரி | ச ரி | க ம ||

*b.* திஸ்ர திரிபுடை. இதன் லகுவுக்கு அக்ஷரகாலம் 3. இரண்டு துருதங்கள் 2, 2. ஆக அக்ஷரகால மொத்தம் 7. அதை $\frac{3+2+2}{7}$ என்று எழுதுகிறோம். இதுவே பொதுவாய் திரிபுடைதாளம் என்னப்படுகிறது. (உ-ம்.) | ச ரி க | ச ரி | க, ம ||

(4) அடதாளம். இது நான்கு அங்கங்களுடையது. அவை லகு, லகு, துருதம், துருதம் என்பன. கண்டஜாதி அடதாளத்தையே பொதுவாய் அடதாளமென்று சொல்லுகிறோம். அதற்கு மொத்த அக்ஷரகாலம் 14. அதை $\frac{5+5+2+2}{14}$ என்று எழுதுகிறோம்.

(உ-ம்.) | சரீகா | சாரிக | மா | மா || இத்தாளம் வர்ணங்களிலன்றி பெரும்பாலும் அங்கம் பிரிக்காமல் சாபுதாளமாகவே வழங்கப்பட்டு வருகிறது.

(5) ஏகதாளம். ஒரே அங்கத்தையுடையது: அது லகு மட்டும். சர்வ லகு என்றும் கூறப்படும். இதில் நான்கு தாளங்களைக் கூறுவோம்.

*a.* சதுஸ்ர ஏகம். லகுவுக்கு அக்ஷரகாலம் 4. அதை $\frac{4}{4}$ என்றெழுதுகிறோம். (உ-ம்.) | சரிகம || பொதுவாய் ஏகதாளமென்றால் அது இதையே குறிக்கும்.

*b.* திஸ்ர ஏகம். இதன் லகுவுக்கு அக்ஷரகாலம் 3. அதை $\frac{3}{3}$ என்றெழுதுகிறோம். (உ-ம்.) | சரிக ||

*c.* மிஸ்ர ஏகதாளம். இதன் லகுவுக்கு அக்ஷரகாலம் 7. அதை $\frac{7}{7}$ என்றெழுதுகிறோம். (உ-ம்.) | சரிகசரிகம ||

இந்தத் தாளம் பொதுவாய் மூன்றும் நான்குமாக இரண்டு அங்கங்களாகப் பிரித்துச் சற்றுத் துரிதகாலத்தில் சாபுதாள மென்கிற பெயரால் பாடப்பட்டு வருகிறது. இது அடதாளசாபு என்றும், மிஸ்ரசாபு என்றும் பெயர் பெறும். அதை $\frac{7(3+4)}{7}$ என்று எழுதுகிறோம். (உ-ம்.) | சரீ | காமா ||

குறிப்பு. சாபு என்கிற வார்த்தை அங்கம் பிரிக்காமல் எந்தத் தாளத்தையும் லகுத்தட்டாகப் போடுவதைக் குறிக்கும். ஆகையால் அங்கம் பிரிக்காமலும் அக்ஷரகாலம் எண்ணாமலும் போடும் தாளத்துக்கெல்லாம் சாபு என்று சொல்லலாம்.

*d.* கண்ட ஏகதாளம். இதன் லகுவுக்கு அக்ஷரகாலம் 5. அதை $\frac{5}{5}$ என்றெழுதுகிறோம். (உ-ம்.) | சரிசரிக ||

7. காலம். தாளசம்பந்தமாய் மாணவ னறியவேண்டிய இன்னொரு விஷயம் காலம். இது தாளப்பிரமாணங்களுள் பத்திலொன்று.

பாடலின் கால அளவை இது குறிக்கும். பொதுவாக மூன்றுகாலங்களிற் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. அவைகளுக்கு விளம்பம், மத்தியம், துரிதம் என்று பெயர். விளம்பம், ஓசையை நீட்டித் தாமதமாய்ப் பாடுங்காலம். இது சவுக்கம் என்றுஞ் சொல்லப்படுகிறது. இது முதற்காலம். மத்தியம், முதற்காலத்தை மடித்துச் சற்று தீவிரமாய்ப் பாடுங்காலம். இது இரண்டாங் காலம். துரிதம், இரண்டாங்காலத்தை மடித்து அதிக தீவிரமாய்ப் பாடுங்காலம். இது மூன்ருங்காலம் அல்லது திரிகாலம் என்னப்படுகிறது. கீழே உதாரணங் காண்க:

(உ-ம்.)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ச ரி க ம | ப த | நி ச் | வி. |
| 2. | சரி கம பத நிச் | சரி கம | பத நிச் | ம. |
| 3. | சரிகமபதநிச்சரிகமபதநிச் | சரிகமபதநிச் | சரிகமபதநிச் | து. |

இங்கு முதற்காலத்தில் 8 சுரங்களை உச்சரித்த கால அளவில் இரண்டாங் காலத்தில் 16 சுரங்களையும், மூன்ருங் காலத்தில் 32 சுரங்களையும் மடித்து உச்சரித்திருப்பதைக் கவனிக்க. இவைகளில் 8, 16, 32 ஆக வந்த அக்ஷரகால உள்ளடக்க சுரங்களுக்குக் களைகளென்று பெயர். அவை முதற்காலத்தில் முழு களைகளாகவும் இரண்டாங் காலத்தில் அரை களைகளாகவும், மூன்ருங் காலத்தில் காற் களைகளாகவும் நின்றன. இவ்விதம் ஒரு தாளத்தில் சுரங்கள் முழு களை, அரை களை, கால் களைகளாக வந்து கால வித்தியாச மேற்படும்போது அதற்கேற்றவண்ணம் சுரங்களை நீட்டியுங் குறுக்கியும் பாடிக்கொள்ளவேண்டும். யாதாமொரு பாடலை இந்த மூன்று காலங்களிலும் பாடலாம். ஆரம்ப காலத்தை விளம்பமாக வைத்துக்கொண்டு மற்றக் காலங்களை மடித்துத் துரிதப்படுத்திப் பாடவேண்டியது.

பின்வரும் உதாரணத்தில் சுரங்கள் களைபேதம் பெற்று வந்திருப்பதைக் கவனிக்க.

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| தாநீ பா . . . . மா காமா | ரீ . . . . ரீ | காமா பாநீ || |
| மாநீ தாநீ ச்நிதநி பமகம | ரீ . . . . ச்ா | . . ச்ா ச்நிநீ || |

(8) எடுப்பு. பாடலைத் தாளத்துடன் ஆரம்பிப்பதற்கு எடுப்பு என்று பெயர். இதுவும் தாளப் பிரமாணங்கள் பத்திளென்று. இதற்கு கிரஹம் என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு பாடலையும் தாளத்துடன் எவ்வாறு எடுத்துப் பாடவேண்டுமென்பது

மாணவ ரறியவேண்டிய முக்கிய விஷயமாதலால் அதையும் இங் கெடுத்துக் கூறுகிறோம்.

பாட்டு எடுப்பு, அதீதம் அனாகதம் சமம் விஷமம் என நான்கு வகைப்படும். இவைகளில் (1) குரல் முன்னும், தாளம் பின்னு மாய் வருவது அதீதம். (2) தாளம் முன்னுங் குரல் பின்னுமாய் வருவது அனாகதம். (3) குரலுந் தாளமும் சமமாய் வருவது சமம். (4) அவை மூன்றுங் கலந்து வருவது விஷமம். விஷமமாய்ப் பாடுதல் சாஸ்திர சம்பிரதாயமன்று. ஆகையால் அது தவிர்க்கப் படவேண்டும். அதீதமாகவும், அனாகதமாகவும், சமமாகவுமே பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. அதீத அனாகத எடுப்பு களுக்குப் பொதுவாய் உசி என்றும் ஒரு பெயருண்டு. இப்புஸ்த கத்தில் இந்த எடுப்புகள் அந்தந்தப் பாடல்களின் சுரங்களிற் காண் பிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணம்:

*a.* **அதீதம்.**

ம | ப மா | காரி | க மா | காரி | சரீ | தா̣ச | ரிமா | . . }

திஸ்ர ஏகதாள பல்லவியாகிய இதில் பாடல் தாளத்துக்கு முன் னாரம்பிக்கிறது. தாளம் பாடலுக்குப் பின்னால் இரண்டாம் அக்ஷர காலத்தில் விழுகிறது. கடைசி ஆவர்த்தனத்தில் குறைகிற ஒரு அக்ஷர கால சுரம் தாளத்துக்கு முன்னெடுத்துக்கொள்ளப்பட்டது. இதுவே அதீதம்.

*b.* **அனாகதம்.**

| . . பா பாபா பாமா பதநீ | ச்ா . . . . நீ | தபமா காகரி |

| . . ரீ சாந̣ிச ரீரீ கமபம | கா . . . . ரீ | சா . . . . . . |

| . ; ||

இந்த ஆதிதாள கீர்த்தனையில் தாளம் போட்டபிறகு முதலாம் அக்ஷர காலம் மூன்றாங் களையில் பாடல் ஆரம்பிக்கிறது. இதில் அக்ஷர காலமொன்றுக்கு நான்கு கால் களைகள் பேசுகின்றன. முதலில் எத்தனை களைகளை தள்ளிப் பாடல் ஆரம்பித்தாலும் பாடல் எடுத்த இடத்திலேயே வந்து முடிவு பெறும். முடிவு பெறுமிடத்தை || இவ்வித குறியினால் காண்பித்திருக்கிறோம். 5-ம் அதிகாரத்தில் வரும் பாடல்களில் இதைக் கவனிக்க.

*c.* **சமம்.**

| சரிகா . . மா பாமா காரீ | சநி சா . . மத | பா மா காரீ |
| கமபா . . தா பாமா காரீ | கமபா . . மா | மாகா ரீசா ||

குறிப்பு.—இதில் பாட்டும் தாளமும் சமமாக வருகிறது. இந்த எடுப்பு விஷயமாய்ப் பொதுவாய் மாணவ ரறியவேண்டியதென்ன வெனில்: | இவ்வித குத்துக் கோட்டுக்குப் பக்கத்தில் வரும் சுரத்தின்மேல் சகஜமாக தாளம் விழும். அப்படி விழுவதெல்லாம் சம எடுப்பு. கோட்டுக்கு முன் பக்கத்தில் சுரமிருக்குமாயின் அது அதீத எடுப்பு. கோட்டுக்குப் பின்னால் . . . . இவ்வித புள்ளிகள் வந்தபின் எடுக்குமானால் அது அனாகத எடுப்பு என்றறிக.

## EXERCISES IN TALAS

### அலங்காரங்கள் அல்லது தாள அப்பியாசங்கள்

மாணவர் கிரமமாய் வாத்திய கருவிகளில் வாசித்தும் கைத் தாளம் போட்டும் பழகும்பொருட்டு சில தாள அப்பியாசங்களை இங்கே எழுதுகிறோம். இந்தத் தாள அப்பியாசங்களுக்கு அலங் காரங்கள் என்று பெயர். இவைகளையும் சரளி வரிசைகளைப் போலவே மாயாமாளவ கௌள சங்கராபரண சுருதிகளில் விளம்ப, மத்திய, துரித காலங்களில் வாசித்துப் பழகவேண்டியது.

1. சதுஸ்ர ரூபகதாளம். $\frac{2,\ 4}{6}$

| ஆரோஹணம். | அவரோஹணம். |
|---|---|
| \| ச ரி \| ச ரி க ம \|\| | \| ச் நி \| ச் நி த ப \|\| |
| \| ரி க \| ரி க ம ப \|\| | \| நி த \| நி த ப ம \|\| |
| \| க ம \| க ம ப த \|\| | \| த ப \| த ப ம க \|\| |
| \| ம ப \| ம ப த நி \|\| | \| ப ம \| ப ம க ரி \|\| |
| \| ப த \| ப த நி ச் \|\| | \| ம க \| ம க ரி ச \|\| |

**2.** திஸ்ர ரூபகதாளம். $\frac{2,\,3}{5}$

| ஆரோஹணம். | அவரோஹணம். |
|---|---|
| \| ச ரி \| ச ரி க \|\| | \| ச் நி \| ச் நி த \|\| |
| \| ரி க \| ரி க ம \|\| | \| நி த \| நி த ப \|\| |
| \| க ம \| க ம ப \|\| | \| த ப \| த ப ம \|\| |
| \| ம ப \| ம ப த \|\| | \| ப ம \| ப ம க \|\| |
| \| ப த \| ப த நி \|\| | \| ம க \| ம க ரி \|\| |
| \| த நி \| த நி ச் \|\| | \| க ரி \| க ரி ச \|\| |

**3.** திஸ்ர ஏகதாளம். $\frac{3}{3}$

| ஆரோஹணம். | அவரோஹணம். |
|---|---|
| \| ச ரி க \|\| | \| ச் நி த \|\| |
| \| ரி க ம \|\| | \| நி த ப \|\| |
| \| க ம ப \|\| | \| த ப ம \|\| |
| \| ம ப த \|\| | \| ப ம க \|\| |
| \| ப த நி \|\| | \| ம க ரி \|\| |
| \| த நி ச் \|\| | \| க ரி ச \|\| |

**4.** சதுஸ்ர ஏகதாளம். $\frac{4}{4}$

| ஆரோஹணம். | அவரோஹணம். |
|---|---|
| \| ச ரி க ம \|\| | \| ச் நி த ப \|\| |
| \| ரி க ம ப \|\| | \| நி த ப ம \|\| |
| \| க ம ப த \|\| | \| த ப ம க \|\| |
| \| ம ப த நி \|\| | \| ப ம க ரி \|\| |
| \| ப த நி ச் \|\| | \| ம க ரி ச \|\| |

5. கண்ட ஏகதாளம். $\frac{5}{5}$

| ஆரோ. | அவரோ. |
|---|---|
| \| ச ரி க மா \|\| | \| ச் நி த பா \|\| |
| \| ரி க ம பா \|\| | \| நி த ப மா \|\| |
| \| க ம ப தா \|\| | \| த ப ம கா \|\| |
| \| ம ப த நீ \|\| | \| ப ம க ரீ \|\| |
| \| ப த நி ச்ா \|\| | \| ம க ரி சா \|\| |

6. திஸ்ர திரிபுடைதாளம். $\frac{3,\ 2,\ 2}{7}$

| ஆரோ. | அவரோ. |
|---|---|
| \| ச ரி க \| ச ரி \| க ம \|\| | \| ச் நி த \| ச் நி \| த ப \|\| |
| \| ரி க ம \| ரி க \| ம ப \|\| | \| நி த ப \| நி த \| ப ம \|\| |
| \| க ம ப \| க ம \| ப த \|\| | \| த ப ம \| த ப \| ம க \|\| |
| \| ம ப த \| ம ப \| த நி \|\| | \| ப ம க \| ப ம \| க ரி \|\| |
| \| ப த நி \| ப த \| நி ச் \|\| | \| ம க ரி \| ம க \| ரி ச \|\| |

7. சதுஸ்ர திரிபுடைதாளம். $\frac{4,\ 2,\ 2}{8}$

| ஆரோ. | அவரோ. |
|---|---|
| \| ச ரி க ரி \| ச ரி \| க ம \|\| | \| ச் நி த நி \| ச் நி \| த ப \|\| |
| \| ரி க ம க \| ரி க \| ம ப \|\| | \| நி த ப த \| நி த \| ப ம \|\| |
| \| க ம ப ம \| க ம \| ப த \|\| | \| த ப ம ப \| த ப \| ம க \|\| |
| \| ம ப த ப \| ம ப \| த நி \|\| | \| ப ம க ம \| ப ம \| க ரி \|\| |
| \| ப த நி த \| ப த \| நி ச் \|\| | \| ம க ரி க \| ம க \| ரி ச \|\| |

8. மிஸ்ர ஜாதி ஜம்பைதாளம். $\frac{7,\ I,\ 2}{10}$

| ஆரோ. | | | அவரோ. | | |
|---|---|---|---|---|---|
| சரிக சரிசரி | க | மா | ச்நித ச்நிச்நி | த | பா |
| ரிகம ரிகரிக | ம | பா | நிதப நிதநித | ப | மா |
| கமப கமகம | ப | தா | தபம தபதப | ம | கா |
| மபத மபமப | த | நீ | பமக பமபம | க | ரீ |
| பதநி பதபத | நி | ச்ா | மகரி மகமக | ரி | சா |

9. மிஸ்ர சாபுதாளம். $\frac{7\ (3+4)}{7}$

| ஆரோ. | | அவரோ. | |
|---|---|---|---|
| ச ரீ | கா மா | ச் நீ | தா பா |
| ரி கா | மா பா | நி தா | பா மா |
| க மா | பா தா | த பா | மா கா |
| ம பா | தா நீ | ப மா | கா ரீ |
| ப தா | நீ ச்ா | ம கா | ரீ சா |

10. கண்ட ஜாதி அடதாளம். $\frac{5,\ 5,\ 2,\ 2}{14}$

| ஆரோ. | | | | அவரோ. | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சரீகா | சாரி கா | மா | மா | ச்நீதா | ச்ாநிதா | பா | பா |
| ரிகாமா | ரீகமா | பா | பா | நிதாபா | நீத பா | மா | மா |
| கமாபா | காமபா | தா | தா | தபாமா | தாபமா | கா | கா |
| மபாதா | மாபதா | நீ | நீ | பமாகா | பாமகா | ரீ | ரீ |
| பதாநீ | பாதநீ | ச்ா | ச்ா | மகாரீ | மாகரீ | சா | சா |

**தாள வாய்ப்பாடு.** மேற்கூறப்பட்ட தாள அப்பியாசங்களில் தாளங்கள் சுரங்களால் உச்சரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வா றின்றி சொற்களினால் உச்சரிப்பதுமுண்டு. அந்தச் சொற்கட்டு கள் தாளக் கணக்கின்படி யமைந்து தாளவாய்ப்பாடுகளாகும். அவை தாளங்களை யெளிதாய் மனதில்வைக்க உதவியாயிருப்ப தால் அவற்றைக் கீழே குறிப்பிடுகிறோம்.

தாளச் சொற்கட்டுகள்

| | | |
|---|---|---|
| ஒரு | அக்ஷரகாலத்துக்கு | —த |
| இரண்டு | ,, | —தக |
| மூன்று | ,, | —தகிட |
| நான்கு | ,, | —ததகிட |
| ஐந்து | ,, | —தகதகிட |
| ஆறு | ,, | —தகததகிட |
| ஏழு | ,, | —தகிடததகிட |

இவற்றை அந்தந்த தாளத்தின் அக்ஷரகாலத்துக்கிசைய உப யோகித்துக்கொள்ளவேண்டும். உதாரணமாக சதுஸ்ரரூபகம் | தக | ததகிட || என்றும் திஸ்ரரூபகம் | தக | தகிட || என்றும், திஸ்ரதிரிபுடைதாளம் | தகிட | தக | தக || என்றும் இவ்விதமாய் அவ்வத்தாள அளவின்படி வரும்.

---

# அத்தியாயம் 3.

## Ragam—இராகம்

சுருதிகளின் சேர்க்கையினாலுண்டான எந்த சப்தம் கேட்பவர் மனதைச் சந்தோஷிக்கச் செய்யுமோ அது இராகமென்று சொல் லப்படும். முதலாம் அதிகாரம் எட்டாம் பத்தியில் இராகச் சுருதி களைக் குறித்துச் சொன்னவிடத்தில், ஷட்ஜ முதல் நிஷாதம் ஈறு யுள்ள பன்னிரு சுருதிகளில் சுருதிகள் ஐந்தாகவும், ஆறாகவும் சேர்ந்து இராகங்களுற்பத்தியாகின்றனவென்று கூறியிருக்கிறோம். இதைச் சற்று விவரித்துக் காட்டுவோம்.

முதலாம் அத்தியாயம் 6-ம் பத்தியிற் கண்ட பன்னிரு ஸ்தான சக்கரத்தை நமக்கு முன் வைத்துக்கொள்ளுவோம். அவைகளில் சுரத்துக்கொரு சுருதியாக ஏழு சுருதிகளைத் தெரிந்தெடுத்துக்

கீழே எழுதுவோம். அது பின் வருமாறு வரும். ச ரி$_2$ க ம ப த$_1$ நி. இங்கே கோமளம் தீவிரமென்று இரு வித்தியாசங்களுள்ள விக்ருதி சுருதிகளில் கோமள சுருதிகளையே எடுத்துக்கொண்டு ச ப என்னும் பிரகிருதி சுருதிகளையுங்கூடச் சேர்த்து மொத்தம் எழு சுருதிகளாக எழுதினோம். இவைகளை யாதாமொரு வாத்திய கருவியிற் பேசுவிக்கும்போது காதுக்கினிமைதரக்கூடிய ஒரு நாதம் பிறக்கிறது. அந்த நாதமே ஒரு இராகமாகும். இப்படியே விக்ருதி சுருதிகளில் தீவிர சுருதிகளையே தெரிந்தெடுத்து பிரகிருதி சுருதிகளையுஞ் சேர்த்துத் தொனிக்கும்போது இன்னொருவகை இராகமாகிறது. பின்னும் கோமள தீவிர சுருதிகளைக் கலந்து தொனிக்கும்போது வேறொருவகை இராகமாகிறது. இதுவே இராகங்களுற்பத்தியாகும் விதம். இவ்விதம் உற்பத்தியாகும் இராகங்கள் மேளகர்த்தா இராகங்களென்றும் ஜன்னிய இராகங்களென்றும் இருவகைப்படும். அவற்றை முறையே விவரித்துக் காட்டுவோம்.

1. **மேளகர்த்தா இராகங்கள்.** மேலே சொன்னபடி எழு சுருதிகளையுஞ் சம்பூரணமாயும் ஒழுங்காயும் எடுத்து உற்பத்திசெய்யும் இராகங்களெல்லாம் மேளகர்த்தா இரா்கங்களென்னப்படும். இந்த இராகங்களிலிருந்து அநந்த இராகங்கள் பிறக்கிறபடியினாலே இவைகள் தாய் இராகங்களென்றும் ஜனக இராகங்களென்றுங் கூறப்படுகின்றன. சாஸ்திரத்தின்படி சுருதிகள் பதினாறாகக்கொண்டு சுத்த மத்திமத்தில் 36 பேதங்களும் பிரதி மத்திமத்தில் 36 பேதங்களுமாக 72 பேதங்களையுண்டாக்கி இந்த மேளகர்த்தாக்களின் தொகை 72 என்று கணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் ஆரம்பத்திற் சொன்னபடி அதிக உபயோகமில்லாத 4 சுருதிகளை நீக்கிவிட்டுப் பன்னிரு சுருதிகளைமட்டும் வைத்துக்கொண்டால் இம்மேளகர்த்தாக்களின் தொகை 32 மாத்திரமாகும். இவைகளினுங்கூட வெகு சொற்ப மேளகர்த்தாக்களே இப்போது வழங்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலானவை யின்னுங் கிருஷி செய்யப்படாத நிலம்போலும் கண்டறியப்படாத தேசம் போலுமிருக்கின்றன. தென்னாட்டில் புகழுடம்பு பெற்ற தியாகையர்போன்ற சங்கீத வித்வ சிரோன்மணிகளிற் சிலர் உபயோகப்படாமலிருந்த மேளகர்த்தா இராகங்களிலும் அவற்றின் ஜன்னியங்களிலும் பெருந்தொகையான கீர்த்தனங்களைப் பாடியிருக்கிறார்கள். என்றபோதிலும் உபயோகத்திலிருக்கும் மேளகர்த்தாக்கள் சொற்பமேயாகும். இங்கே இப்புஸ்தகத்தில் அவற்றினின்றும் வெகு முக்கியமான மேளகர்த்தாக்களைமட்டும் குறிப்பிடுகிறோம். மற்றவைகளை அநுபந்தத்திற் காண்க.

## முக்கியமான மேளகர்த்தாக்கள்

| லக். | மேள லக்கம் | பெயர் | இராக சுருதி | ஆரோஹணம் | அவரோஹணம் |
|---|---|---|---|---|---|
| 1 | 8 | ஹனுமத்தோடி | ரி ♭ க ம த ♭ நி ♭ | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 2 | 15 | மாயாமாளவகௌளம் | ரி ♭ க ♯ ம த ♭ நி ♯ | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 3 | 16 | சக்ரவாகம் | ரி ♭ க ♯ ம த நி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 4 | 20 | நடபைரவி | ரி ♯ க ம த ♭ நி ♭ | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 5 | 22 | கரஹரப்பிரியா | ரி ♯ க ம த ♯ நி ♭ | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 6 | 23 | கௌரிமனோகரி | ரி க ம த ♯ நி ♯ | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 7 | 28 | ஹரிகாம்போதி | ரி ♯ க ♯ ம த ♯ நி ♭ | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 8 | 27 | சரசாங்கி | ரி ♯ க ♯ ம த ♭ நி | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 9 | 29 | தீரசங்காரபரணம் | ரி ♯ க ♯ ம த ♯ நி ♯ | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 10 | 53 | கமனப்பிரியா | ரி ♭ க ♯ ம ♯ த நி ♯ | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |
| 11 | 65 | மேசகல்யாணி | ரி ♯ க ♯ ம ♯ த ♯ நி ♯ | சரிகமபதநிச் | ச்நிதபமகரிச |

**2. ஜன்னிய இராகங்கள்.** எழு சுருதிகளும் சம்பூரணமா யிருந்து உற்பத்திசெய்யும் இராகங்கள் மேளகர்த்தா இராகங்க ளென்று மேலே கூறினோம். அந்தச் சுருதிகளில் ஒன்றிரண்டு குறைந்த இராகங்கள் ஜன்னிய முன்பின்னாய்த் திரிந்தாகிலும் பிறப்பிக்கும் இரா கங்கள் ஜன்னிய இராகங்களென்று கூறப்படும். இவ்விதம் மேள கர்த்தா இராகங்களினின்று பிறக்கும் ஜன்னிய இராகங்கள் அனந்த மிருக்கின்றன. இவைகளில் சுரங்கள் அல்லது சுருதிகள் (சுருதி களையே பொதுவாக சுரங்களென்று சொல்லுவதுமுண்டு) குறைந்து வருபவை வர்ஜ இராகங்களென்றும், சுரங்கள் திரிந்து வருபவை வக்ர இராகங்களென்றும் பெயர் பெறும்.

வர்ஜ வக்ர இராக பேதங்களைக் கூறுமுன்னர் ஜன்னிய இரா கங்களிற் சில அப்பியாசங்களைத் தர விரும்புகிறோம். வாத்திய கருவிகளில் வாசிப்போருக்கும் வாய்ப்பாட்டாகப் பாடுபவருக்கும் சுருதிகளின் நிச்சயமும் இராக ஞானமு முண்டாகும்பொருட்டுப் பின்வரும் கீதங்களைப் பாடி அப்பியாசஞ் செய்யவேண்டியது. மேலும் இக்கீதங்களுக்குச் சாஹித்யமும் எழுதப்பட்டிருக்கிறபடி யால் சுரங்களுக்கேற்ப சாஹித்யத்தையும் பாடி அப்பியசிக்கவேண் டும். அவ்வாறு செய்யுங்கால் இராக ஞானம் இலகுவாயேற்படும்.

## EXERCISES IN RAGAMS

## கீதங்களின் அப்பியாசம்

1. இராகம் : மலஹரி. (ரி♭ க♯ ம த♭ நி♯)

தாளம் : ரூபகம். $\frac{2, 4}{6}$

| | | | | | |
|---|---|---|---|---|---|
| a. | \| ம ப | \| த ச் ச் ரி ‖ | ரி ச் | \| த ப ம ப | ‖ |
| | ஸ்ரீ | குரு பர | சிற் | சுக வர | |
| | \| ரி ம | \| ப த ம ப ‖ | த ப | \| ம க ரி ச | ‖ |
| | கரு | ணா லய | கம | ல நய ன | |
| | \| சா | \| ரி ம க ரி ‖ | ச ரி | \| க ரி சா | ‖ |
| | தே | ஜோன் மய | திரு | வடிவே | |
| | \| ரி ம | \| ப த ம ப ‖ | த ப | \| ம க ரி ச | ‖ |
| | தே | வ குமா | னே | நமோ நமோ ! | |

6. | த ப | ம க ரி ச || ரி ம | ப த ம ப ||
பரி பூ ரண கிரு பா கர
| த ரி | ரி ச் த ப || த ப | ம க ரி ச ||
பர ஞர் தரு குரு நா யுக
| சா | ரீ ரீ || த ப … க ரி ச ||
பா ரா ஞம் … யே நார்
| ச ரி | … க ரி || ச ரி | க ரி சா ||
பரி க்ரா ரியெ ந மொ ந மோ!

2. இராகம் : மலஹரி. (ரி♭ க♯ ம த♭ நி♯)

திரிபுடை தாளம். $\frac{3, 2, 2}{7}$

| த ச் ச் | த ப | ம ப || த த ப | ம ம் | பா ||
புவன தா ரக புனித னே ஓ
| த த ச் | த ப | ம ப || த த ப | ம க | ரி ச ||
பூ த லப் பி ர . சா த னே எ எ
| ச ரி ரி | ச ரி | ச ரி || த த ப | ம க | ரி ச ||
ந வ க ஞ திப நா த னே எ எ
| த ப த | ச்ா | த ப || த த ப | ம க | ரி ச ||
நரர்கள் தா ரக நமோ நமோ ஓ ஓ
| ரி ச த | சா | சா || ம க ரி | ம ம | பா ||
பரம நா தா ப அக்தர் பணி யும்
| ச் தா | த ப | ம ப || த த ப | ம க | ரி ச ||
ப தா நிரு மல ஜோதி யே எ எ
| ப ம ப | த ச் | த ச் || ரி ச் த | த ச் | த ப ||
அருமை மிரு சுப காவி ஞே தா
| த த ப | பா | ப ம || ரி ம ம | பா | பா ||
ஆன்ம கோ டிகள் புகு செம் பா தா

| த த த | பா | ப ம ‖ ரீ ம | ம க | ரி ச ‖
தரும சா கர னே வி சா லா

| சா ச | த த | த ப ‖ பா ப | ம க | ரி ச ‖
தாழ்வி லா த நல் தே வ பா லா

| தச்ா | த ப | மப ‖ தத ப | மக | ரிச ‖
தயா பர னே நமோ நமோ ஓ ஓ

3. இராகம் : மோஹனம். (ரி க♯ ம த நி)

தாளம் : ரூபகம். $\frac{2, 4}{6}$

| க க | பா பா ‖ த ப | ச்ா ச்ா ‖
தரு மே சா பவ நா சா

| ரி̇ ச் | த தபா ‖ த ப | க க ரீ ‖
தா ச ரிரு த ய வா சா

| க ப | த ச் தா ‖ த ப | க க ரீ ‖
அரு மறையி னுப் தே சா

| க க | த ப கா ‖ ப க | க ரி சா ‖
அம லப்பிர கா சா ஆ

| க க | க க ரி க ‖ ப க | பா பா ‖
நிரு மல சுப கர சீலா

| க க | த ப தா ‖ த ப | ச்ா ச்ா ‖
நிரஞ் சன சத் திய நூலா

| த ச் | ரி̇ ரி̇ ச் ச் ‖ த ச் | த த த ப ‖
வர தாரக ஆத் ம நாத

| க ப | த ச் த ப ‖ த ப | க க ரி ச ‖
மங் களகுண கல் யாணு

| ச க | கா கா ‖ க ரி | ப க ரீ ‖
சரு வா தா ரா நினைக்கே

| ச ரி | ச க ரி ச ‖
ஜயு ஜய ஜய !

4. இராகம்: ஆபி. (ரி க♯ ம த நி♯)

திரிபுடை தாளம். $\frac{3, 2, 2}{7}$

| பா ப | ம ம | பா || ம க ரி | ச ரி | ம க ||
வேத நூ லோ ஓ ஓ து சுங் ங் ங்

| ரி ரி ச | த த | ரி ச || ரீ. | ரீ | ச ரி ||
ங் ங் ங் ங் ங் ங் ங் த்ரா ஆ நர

| ம க ரி | ரி ச | சா || ப ம ம | பா | பா ||
வம்ச தில கா ஞான மந்த் ரா

| ப ம ப | ம க | ரி ரி || மகரி | சரி | சச ||
அஅஅ அஅ அஅ அஅஅ அஅ அஅ

| த த ரி | ச ரி | ச ச || த சா | த த | த ப ||
அஅஅ அஅ அஅ அஆ மே திணி

| ப ம ப | த ச | சா || ரி ச ரி | ம க | ரி ரி ||
போவஷ க அ னே வேள திஇ யர்ம

| ம க ரி | ம ம | ப ம || பா ப | பா | பா ||
ஞைஒ ரஞ் சன வீர தீ ரர்

| ப ம ப | த ச் | ச்ரி || ம்க் ரி | ச் ச் | ச் ச் ||
ஆதி ஜோ திஇ யான வஅ னே

| த த ரி | ச் ரி | ச் ச் || ச் ச் ச் | த ப | ம ப ||
அஅஅ அமிழ் அமிழ் அஅஅ அமிழ் அமிழ்

| ப ம ப | த ச் | ச்ா || ச்ா ச் | த த | பா ||
அஅஅ அமிழ் தே தீன ஜனப் ரஅ

| ப ம ப | ம க | ரி ச ||
போ ஒ நமஸ் தே!

5. இராகம்: காம்போதி. (ரி க ♯ம த நி)

தாளம்: ஆதி. $\frac{4, 2, 2}{8}$

| ச்ா நிப | தத | ச்ா || தச்ரிக் | ம்க் | க்ரி ||
வாஹுல கிருங் தே வந்தவ ஞ ரே

| ச்ரிச்ச் | நிநி | தப || ததபம | கம | பா ||
வல்வினை யற வுயிர் தந்தவ ஞ ரே

| கபதச் | நிநி | தப || ததபப | மக | ரிச ||
அவனெழிற் பத மலர் தனைப்பணி மன னே

| கப்பத | தச் | ச்ரி || ரிப்ம்க் | ரிக் | ரிச் ||
எஎஎஎ எஎ எஎ எஎஎஎ எஎ எஎ

| ச்ரிச்ச் | நிநி | தப || ததபம | கம | பா ||
அன்பது பெரு கிஇ நின்றவ ஞ ரே

| கபதச் | நிநி | தப || ததபப | மக | ரிப ||
அவனெழிற் பத மலர் தனைப்பணி மன னே!

6. இராகம்: ஆனந்தபைரவி. (ரி க ம த ♭ நி)

தாளம்: ஆதி. $\frac{4,\ 2,\ 2}{8}$

| நிதநிச் | ச்ா | நிநிச் || க்ரிச்நி | நித | பம ||
அகிலம ஞே கா கருணைப ரா பர

| பபபத | நித | பம || மபமப | கரி | சா ||
அஅமல னே நின தருட்புரி வா யே

| சா நி | சக | கம || கம பம | கரி | சா ||
அத்தா அஅ அடி யனுக்கிரங் கா யே

| பா மக | மா | கரி || கா ரிநி | சா | சா ||
ஆதரை நான் பெரும் பாவியென் மீ தே

| பப மக | மம | கரி || ககரிநி | சா | சா ||
அனுக்கிர கம் புரி வாயே நீ யே

| சக ரிக | மக | மா || பநிதநி | பத | நிச் ||
உனைவிட எனக் கார் உதவி இ ஐ யா

| க்ரிச்நி | நித | பம || பபபத | நித | பம ||
உவந்தெனை யா ளா விடிலெங் குறு வேன்

| மப மப | கரி | சா ||
உயர்பரம் பொரு ளே!

7. இராகம்: கல்யாணி. (ரி க♯ ம♯ த நி♯)

தாளம்: திரிபுடை. $\frac{3, 2, 2}{7}$

a. | ச்ச்ச் | நித | நிச் || நி தப | தப | மப ||

கமல நய ள ககன ரடி பணி

| கமப | பத | தநி || தபம | பக | ரிச ||

கருணை வா ரிதி நீயன் ரே ஒஓ

| ததத | கக | கா || மபா | மக | ரிச ||

அடிய னின் சரண் அடைந் தேன் . .

| ரீ.ரி | சா | சா ||

ஆ.ள் வாய் .

b. | கமத | மப | தப || நிதப | தப | மப ||

பாப வினை யும் நரக பய மும்

| கமப | பத | தநி || தபம | பக | ரிச ||

படுத்து துன் பம் சகிக்கி லே னே

| ததத | கக | கா || மபா | மக | ரிச ||

அடிய னின் சர ணடைந் தேன் . .

| ரீ . | சா | சா ||

ஆள் வாய் . !

8. இராகம்: கௌளா. (ரி♭ க♯ ம த♭ நி♯)

ரூபகதாளம்: $\frac{2, 4}{6}$

| ச ரி | ப ரி ச ரி || ரி ம | ரி ச ரி ச ||

ச க ல் சு கா தி ப வி சா ல

| ரி பு | ம ரி க ம || ரி ச் | ரி ப ம ப ||

தயை மிகுந்த ஆ. ர ணனே. .

| ரி ரீ | ச ரி ப ப || ம ம | ரி ம ப ச ||

சத த்தியின் அம லா திப . .

| சா | . . சா || ரி ரி | சா ரி ப ||

னே . . வ அக லா ம லென்

| ம ரி | க ம ரி ச || ரி ம | ப நி ப நி ||
மனே . . ரதம். அருள் மே எ எ

| சரி | ரி ம ரி ச || ரி ப | ம ரி க ம ||
எள எள விய அதி தூ யநின்

| ரிச | நி ப ம ப || ரி ரி | ச நி ப ப ||
சே . வ . டி யதி நீ . . டி

| ம ம | ரி ம ப ச || சா | . . சா ||
நிறை வேண் டிட வே . . எ

9. இராகம்: சுத்தசாவேரி. (ரி க ம த நி)

சதுஸ்ர ஏகதாளம். $\frac{4}{4}$

| ம ம க ச | க ச ச நி | ப நி நி ச | நி நி சா |
சுர ரனு தினமும் துதிபுரி பரனே

| ப நி ச க | ச ச நி ப | ச ச நி ப | ம ம க ச ||
சுகுணம னே கர சுந்தர பரனே

| பா பா | நி ப ப ம | ப நி நி ச | நி நி சா |
பரலோ க புவன பதியதி கா ரா

| ப நி ச க | ச ச நி ப | ச ச நி ப | ம ம க ச ||
பா பவி மோசன னே யருள் புரியே!

---

# அத்தியாயம் 4.

## VARJA RAGAM—வர்ஜ இராகம்

மேளகர்த்தா இராகங்களினின்று பிறக்கும் ஜன்னிய இராகங்கள் வர்ஜம் வக்ரமென இருவகைப்படுமென மேலே கூறினோம். இந்த இருவகை இராகங்களேயும் இப்போது முறையே விவரிப்போம்.

1. வர்ஜ இராகம். சுரங்கள் குறைந்து வருபவை வர்ஜ இராகங்களென்று சொல்லப்பட்டதல்லவா? இவ்விதம் சுரங் குறைந்து வரும் இராகங்கள் இருவிதமாகும். அவை ஔடவம் ஷாடவம் என்பனவாம்.

*a.* ஔடவம். இது ஐந்து சுரங்களாற் பிறக்கும் இராகம்.

(உ-ம்.) மோஹனம். { ஆ. ச ரி க ப த ச்
அ. ச் த ப க ரி ச }

*b.* ஷாடவம். இது ஆறு சுரங்களாற் பிறக்கும் இராகம்.

(உ-ம்.) ஸ்ரீரஞ்சனி. { ஆ. ச ரி க ம த நி ச்
அ. ச் நி த ம க ரி ச }

மேற்கூறப்பட்ட இரண்டு உதாரணங்களிலும் ஆரோஹண அவரோஹணங்களில் முறையே ஔடவத்துக்கு ஐந்து சுரங்களும், ஷாடவத்துக்கு ஆறு சுரங்களும் வந்திருப்பதைக் கவனிக்க. இவ்விதம் சுரங்களின் தொகையைக்கொண்டு ஔடவ ஷாடவ பேதத்தை யறிந்துகொள்ளவேண்டியது. எழு சுரங்களாற் பிறக்கும் இராகங்கள் சம்பூரண இராகங்கள்; அவை மேளகர்த்தா இராகங்கள் என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். ஆகவே இராகங்கள் ஔடவ ஷாடவ சம்பூரணமென மூன்று வகையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறதெனக் கண்டறியலாம். சுரங்கள் பொதுவாய் ஐந்துக்குக் குறைந்து இராகங்களைப் பிறப்பிக்கிறதில்லை.

2. ஔடவ ஷாடவ பேதங்கள். மேற்கண்ட உதாரணங்களில் ஔடவத்துக்கு ஆரோஹணத்திலும் அவரோஹணத்திலும் சுரங்கள் ஐந்தாகவே யிருக்கின்றன. ஷாடவத்துக்கு அவ்விதம் ஆறாகவே யிருக்கின்றன. ஆனாலிவை எப்பொழுதும் இந்த ஒழுங்கை யனுசரித்தே வருகிறதில்லை. ஆரோஹணத்தில் சுரங்கள் ஔடவமாகவும் அவரோஹணத்தில் ஷாடவமாகவும், ஆரோஹணத்தில் ஷாடவமாகவும் அவரோஹணத்தில் ஔடவமாகவும் வருவதுமுண்டு. தவிர ஆரோஹணத்தில் ஔடவ ஷாடவமாகவும் அவரோஹணத்தில் சம்பூரணமாகவும், ஆரோஹணத்தில் சம்பூரணமாகவும் அவரோஹணத்தில் ஔடவ ஷாடவமாகவும் வரும். இவ்விதம் வர்ஜ இராகத்தில் எட்டுப் பிரிவுகளுண்டு. அந்த எட்டுப் பிரிவுகளையும் ஆரோஹண அவரோஹணங்களில் அவற்றின் சுரத்தொகையோடு கீழ்க்கண்ட சக்கரத்திற் காண்க.

## ஒளடவ ஷாடவ பேதங்களைக் காட்டிய சக்கரம்

| லக்கம். | வர்ஜராக பேதம் | சுரத்தொகை ஆ. | சுரத்தொகை அ. | ஆரோஹணம் அவரோஹணங்கள் | இராகத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | ஒளடவ ஒளடவம் | 5 | 5 | சரிகபநிச் — ச்நிபகரிச | ஹம்ஸத்வனி |
| 2 | ஒளடவ ஷாடவம் | 5 | 6 | சரிமபதச் — ச்தபமகரிச | மலஹரி |
| 3 | ஒளடவ சம்பூரணம் | 5 | 7 | சரிகபதச் — ச்நிதபமகரிச | பிலஹரி |
| 4 | சம்பூரண ஒளடவம் | 7 | 5 | சரிகமபதநிச் — ச்தபகரிச | கருடத்வனி |
| 5 | ஷாடவ ஷாடவம் | 6 | 6 | சரிகபதநிச் — ச்நிதபகரிச | மலயமாருதம் |
| 6 | ஷாடவ ஒளடவம் | 6 | 5 | சரிகமபநிச் — ச்தபமரிச | ஜனரஞ்சனி |
| 7 | ஷாடவ சம்பூரணம் | 6 | 7 | சரிகமபதச் — ச்நிதபமகரிச | காம்போதி |
| 8 | சம்பூரண ஷாடவம் | 7 | 6 | சரிகமபதநிச் — ச்நிபமகரிகச | நீலாம்புரி |

இந்தக் கிரமத்தைக்கொண்டு இராக இலக்ஷணங்களைக் கணிக்கலாம். மோஹனம் அல்லது ஹம்ஸத்வனியை ஒளடவ ஒளடவ வர்ஜ இராகமென்றும், மலயமாருதம் அல்லது ஸ்ரீரஞ்சனியை ஷாடவ ஷாடவ வர்ஜ இராகமென்றும், நீலாம்புரியை சம்பூரண ஷாடவ வக்ர இராகமென்றும், காம்போதியை ஷாடவ சம்பூரண வர்ஜ இராகமென்றும், மாயாமாளகௌளை, தீரசங்கராபரணம் இவைகளை சம்பூரண சம்பூரண மேளகர்த்தா இராகங்களென்றும் இப்படியே எல்லா இராகங்களுக்குரிய இலக்ஷணங்களையும் வரையறுத்துக்கொள்ளவேண்டும்.

# EXERCISES IN VARJA RAGAMS

## சுரஜதிகளும், வர்ணங்களும்

வர்ஜ இராகங்களில் எட்டுவிதமான இராகங்களிருப்பதாக மேலே சொன்னேம். அவைகளில் முக்கியமானவைகளுக்குப் பாடல்களையும், அந்த இராகங்களை ஆலாபனஞ் செய்யக்கூடியவிதமாய் சுரவிந்நியாசங்களையும் எழுதுமுன்னர் அந்தந்த இராகங்களது கியானமும் அதது பாடப்பட்டிருக்கிற தாளக்கியானமும் மாணவர் மனதில் நன்கு அமையும்பொருட்டு ஜன்னிய இராக சுரஜதிகளிலும் வர்ணங்களிலும் பொதுவாய் வழங்கிவருகிற சிலவற்றை இங்கெழுதுகிறேம். சதுஸ்ர, திஸ்ர, மிஸ்ர, கண்ட, சங்கீரண ஜாதிகளுக்கிசைய சுரங்களை யடுக்கித் தாளத்துக்கிசைத்துப் பாடுவது சுரஜதியாம். இராக சொரூபத்தை விஸ்தரித்து ஜாதி பிரித்துத் தாளத்துக்கிசைத்துப் பாடுவது வர்ணமாம்.

### A. E. சுரஜதிகள்

1. இராகம்: பிலஹரி. (ரி க♯ ம த நி♯) ஆதிதாளம் $\frac{4, 2, 2}{8}$

ப. | சா . ரி காபா த்ா ச்ா நீதா | பாதப மகரிச | ரிசரித சா . . ||
ஞான லோலா வாஞேர் சீலா ஞாலந் தனிலெனைக் காத்தரு ளே!

1. | சா . ரி காபா மா . க பாதா | ி . ச் நீதா | பா . ம காரீ ||
தீ னர் நேயா திவ் ய வாயா சீ ரு லாவும் மா ச காயா.

2. | சா . ரி காகா கா . . . . ரிக | பா . ப பாபா | பா . . . . தப |
வல் ல மாதே வா மொழி சொல்ல நீவா வா நீ
| ச்ா . ச் ச்ாச்ா க்ரிச்நி நிதபா | பதபம ககரீ | கபமக ரிசரிக ||
வந் து தாரா யுனதரு ளினையே அனையே எனையே புவிதனி லிதுததி

3. | பபபா ரீரிரீ கபமக கா . . | கபமக மகரிச | ரிகரிச சா . . |
நலமே தருசற் குணநிதி யே நனிபெரு கியசுப கரபதி யே
| ரிசநித சா . . மகரிக பா . . | தபதரி ச்ா . . | ரிச்நித பமகரி ||
நிலமிதி லே துணையிலை யே நினதரு ளே புரிசுர ரடிபணி.

4. | பா . . மகரிக தா . . மகரிக | பா . . மகரிக | பாபா பா . . |
ஆ இதுவென மோ வருவினை யோ பெரிதத னைக்கொய் யே
| க்ா . . ரிச்நித ரி . . ரிச்நித | ச்ா . . ரிச்நித | ச்ாச்ா ச்ா . . |
கா ருணமக தே வதிபச கா யவருண்ம ழைப்பெய் யே.
| க்ாரிச் ரிரி ரி . . ரிச்நி | தாதா தா . . | பாமக காகா |
பூதல துர்ரிச் சை யோமிக வும்லச் சை யாமது வேகொச்
| கா . . சரிகத பா . . ரிச்ரிக் | க்ா . . க்ரிச்நி | தபமக ரிசரிக ||
சை தினமதை நான் படதா மா தெருணிறை மகிபணி னருள்புரி.

2. இராகம்: மோஹனம். (ரி க ம த நி) $\frac{4,2,2}{8}$

ப. | கா . . . . பா காரீ ரீ . . | சா . . ரீசா | தா . ா தாசா |
சா மி தயை கூ ராய் எனை யாள வா
| சா . . . . . . சா.ரி காபா | கா.த பாகப | காரிகா ரிசரி ||
ராய் தாழ்வி லாசம் பூர ஞகரு ஞகரா பரா

1. | பா . . . . தா தாபா காரி | கா . . . . கா | தாபா காரீ |
பூ மி புரந் தவ னே க னவி னையேன்
| காபத பதச்ா தாபத பதகரி | கபத ச்பதச்த | பகதப கரிசரி |
பூதல மிதிலே ஆதா வேது மற்ற வன்மற்றெரு பற்றில னென்பேல்

2. | பாபாதப கா்காபக ரீகரி | ரீரீ கரிசா | சாரிச ரீசத |
நியேயெனை யாளாவிடி லேபுவி யாரோ துணைதான் யாரிட மேகுவன்
| ச்ாசரீரிசரி காரிக பாதப | காபதரிச் தச் | பதகப கரிசரி |
தாயுநீயெனது தந்தையுஞ் சீர்குரு சம்பத்துறவினர் சகலமு மானவன்

3. | தா . . பதபக பாபா கபகரி | காகா தபதப | காப கபகரீ
தாய் மகவகல் வாளோ பரிவுசெ யாளோ தனியெனை யேவிடல் தகுமோ
| கரிரீ கரீச ரீசதா . சரீ | காப தாச்பா | தகாப கரிசரி ||
தருமா சனுஅ நாததா ரகா தாச ரோதுபா தனேஎ னக்கிரங்கினி

4. | ககபகாரி ரிரிகரீச ரீசத | சசரி ரீகசரி | காரிக பாதப |
தருமவாரி தயையுதாரி தாரணி அழிவு ருதபடி ஓருஞ் சேயனை
| ககபப ததச்ச் ர்ரிக் ர்ரிச்தப | தர்ரிச் தபதச் | ச்ததப கரிசரி ||
தாமன மிசைந்திடர்களைந்தபுனிதனே தகுநலமிலியெனின் முறையினுக் கிரங்கினி

3. இராகம் : கமாஸ். (ரி க ம த நி) $\frac{4,2,2}{8}$

பல். | ச்ா . . ச்ாநீ தாபா . மகா | மா . . . . கா | மாபா . தாநி ||
ஆண் டஅவன் நாமம் நினை யே அன் பில்லா நெஞ்சே!

1. | ச்ா . ர்ி நீ . ச் தா . நி பா . த | மா , ப மா , க | மா . ப தா . நி ||
வேண்டு நல்வ ரஅம ருஉளும் வேத முஉறை யிஇடுந் தாய

2. | ச்ார்ீச்நி நீச்ாநித தாநீ | தப மாதா மக | சமா கமபதநி ||
தீராத்துயர் கவலாதிகள் நீங்கும் சிறுமை வேதனைகள் சமூல மறுபடும்

3. | ச்ரிச்நிசா . . ரிச்நித நீ . . | தநிதப தா . . | பதபம பா . . |
புடவியிலே மிகுதுயர் செய் | கொடுமை மிகும் | பவவினை யாம்

| சசசச மமமம பபபப தததத | நிச்நிச் நிதபா | தபமக மபதநி ||
இடர்றப் புகர்கெட சகலது யருமற | அடியவர் நிதமும் | துதிபுரி யுமுனத

4. | தச்நித பமகமபா . . பதநித | பமகக மா . . | பநிதநி தபதநி ||
உனவுன வுள்மகிழும் உயருமன் | பதுபெரு கும் | கெடுமனக் குணமறும்

5. | ச்சா . . . . ச்நி நிததப பமகக | மா . . . . பத | நிதம கமபதநி |
மா னத குடில்பர மணினிலை | யாம் வளர் | தருகி ருபைபொழியும்

| ச்மக்க் ச்ராச்ா ச்ரிச்ச் நீநீ | நிச்நித தாதா | பதமம பாபா |
புவிபர மா மே பவவினை போமே | கெடுமதி சாமே | அனுதினம் நாமே

| சமாம கபாப மதாத பநீநி | தரிரி நிச்ாச் | நிச்நித பா . . |
விநாச கபாதை யுரு து நிதான | மதாக வெயேக | வலிதரு மே

| மாபம பாதப தாநித நீச்நி | ச்ாரிச் நீச்நி | ச்ரிச்ா நிதபம |
கோதறுவேதிய ரோதிய நாதனின் | பாதச ரோருகம் | துணையே யலது உ

| கமபதநிச் நிரிச்ா . . ச்ரிநிச் | தநி பத மா . . | தபம கமபதநி ||
குவல்ய மொரு துணையே. துனக்கு | குரை கழலே. | யதைவ ருடிதினமும்

## B. வர்ணங்கள்

1. இராகம் : சங்கராபரணம். (ரி க ♯ ம த நி ♯) ஆதிதாளம். $\frac{4, 2, 2}{8}$

ப. சாமி உன்னை நீங்கின் தாளாத்துயர் கொள்ளுவனென்.
அ. ப. தாரணியி லேழையைத் தயவாகக் கண்பாரையா!
ச. தூய நேயன் நீயே.

ப. | ச்ா . . - நிச்தநிபா - மபகா - மா | பா - தநிபா தநி | ச்ரி ச்நிதபதநி |
சா . . . . . மி உ . . . ன் | னை . . . . நீ . | . . . ங் கி ன் |
| ச்ாச்தபம - பா பமகரி - சரிகச | ரி ப - தநிசா-பம | க - ரிகம பாதநி ||
தாளா - . துய . . ர் . . | கொள் . . . ளு | . . வ . . னென் |

அ. ப. | சாததபம - தபாம - கபகாமரி | கமப - ததப - மப | தநி - ச்நிச்ா - ரிக் |
தா . . . . ர . . ணி . . . | யி . . லே . . ழை . | . . யை . . |
| ம்க்ரிச் - ச் ரி -ச்நி தப - தநிச்ரி - ச்ா | ச்தப - பாம - கரி | சமகம - பாதநி |
த . . ய . . வா . . கக் . . கண் | . . . பா . . . | ரை . . . யா . |
| ச்ரிநிச் - தநிச் - பதநி - ச்தப - மபத | மபகமப - ரிகம | ச்ரிகம பதநிச் |
| ரிக்ம்க் - ரிக்ரிச்நி - பதநி - சாபா | ச்நிதபா - மகரி | சரீக - மபதநி ||

ச. | பாதநிச் - ச்நித - பமகரி - காமா | பா - மதாப - ச்நி | தப - மகம - ரிகம || பா.
தூ . . ய . நே . . . . | யன் . நீ . . யே | . . . . . . .

1. | பா , மா . - பா , - காமா - ரீக | சா , - ரீ . - நீ . | , - சாரீ காம || பா.

2. | பதாபமக - மபாமகம - ரிகாரி | சரி - தந்பதரி | சரீ - ரிசரிகம || பா.

3. | மாதபபக - மாபகம - ரிகசாரி | சமகரிசரி - தரி | சரி - கமபா - கம |
| பதநி - பதநிச்ரி - ச்ர்ரீ - ச்நிதநி | ச்ரிநித - பாத | மகரிசா - ரிகம || பா.

4. | பாபப - கமரிகசா - மகரிசநிப | தாரி - சரிசந் - | சரிகமபா - தப |
| ச்ரிரீச் - ம்க்ரிக்ச்ரநி - பதநி | ச்ர - ச்ர நிதபா | மகரிசா - ரிகம || பா.

---

2. இராகம்: கல்யாணி. (ரி க# ம# த நி#) ஆதிதாளம் $\frac{4, 2, 2}{8}$

ப பரமேசனே தூயகருணாகர பாதமாமலர் தோத்திரித்தேனே!

அ. தருவாய் நாதனினருள் சருவகாரண பூதனே!

ச. நீ மகானே ஜீவன் தானே!

ப. | ச்ச்ா - ச்நித - ரிச்நிரி - ததபம-கம , பதநிதா - ரிச்நி | தபம - கமபதநி |
பா - மேஎஎ - சஅனே எஎஎஎ-தூ யஅஅக - ருஉஉ ணாஅ கஅஅஅா

| ச்ரிக்ரிச் - ரிச்ரிச்நி - ரிச்நி - தநித | ந் . . . . ச்நி | தபம - கமபதநி ||
பாஅஅ்அ -தஅஅஅஅ-மாஅ - மஅஅ லர் தோத் திரிஇத் தேஎனேஎ.

அ.ப. | பாமக - நீதா -கதபாம - கரிசரி | சரிகமா . - கம | பகா - மநிதநிப |
தஅஅஅ - அருஉ - உஉவாய்-நாதஅ நிஇஇனஅ- தஅ ருஊ உஉஉஉள்

| தநிச்ரீ - ச்ரிந் - ச்ரிக்ரி - ச்நிதநி | தக்ரிச்நித - பநி | தபம - கமபதநி |
சஅஅரு - வஅஅ - காஅஅ ரஅஅஅ ணஅஅஅஅஅ பூ உஉஉ- தஅஅனே

| ச்ரி - நிச்நி - தநீ - ச்நிதப-மகரி | சரிச-பாம - தா | ப-நித - ரிச்நிதநி |
| தக்ரிநீ - ரிநீ - ச்தா - நி - பதநிச் | க்ரிச்ா - நிதபா | மகரி - கமபதநி ||

ச. | நீ.. ..ச்த ச்நிதபம - கமா | பா.. ..மப | தநிப - தநிதரிச் |
நீ.. ..இஇ மஅஅஅ காஅ | னே ஜீ | வஅன் தாஅனே ன.

1. | பா..மாகாரீ - தாமா கா | ரீ ரி - சா ரீ | காமா பாதா || நீ.

2. | பாதபாம - கம - பாமகாரி - சரி | ாரிநீ - சதநி | சாரிகா - மபத || நி.

3. | நீ....ச்ரிநிச்நி - தநிதபம | பா. - தநித - பத | ப - மபம - கமபத |
| நிச்நிக் - ரிக்ச்ரி - நிச்ாரி ச்ரிநிச் | தநீ - ச்நிதபம | கமபதா நிக்ரி || நி.

4. | ரி....- தக்ரிச் - நிப - தநிச்ரி | ச்ா.... - ச்நி | தபம - காமபத |
| மாபதநி - பாதநிச் - ரிச்நிதநி | ச்நீ - தபம - கம | பத - பநிதா.. |
| நநிச்ரி - ரிக்க்ம் - க்ரிச்நி - ச்ரிசநி | தச்நித பநிதப | ம - காமாபாத || நீ.

3. இராகம்: பைரவி. (ரி க்2 ம த்1 நி) ஆதிதாளம் $\frac{4,2,2}{8}$

ப. இதய நின்னோநாடி யினிது தேடுதையா!
அ. நிதமும் நின்சந் நிதிமேவிப் பரிவாய்.
ச. மாகரு ணேயினேத்ர!

ப. | ரீமா - கரிககரீ - சசரிரி - கக | ரிச - நீத - கரிரி | சரி - பமகரிச |
இத ய-.. நின். .. | .. னோ..நா. | ... டி.. |
| ககரிக - மபத - தபபமக - மகரிச | நிநிதபம ரிச்நி | தப - மபகரிச ||
யி.. னி- து... .தே. | டு... தை.. | .. யா..

| | | | | |
|---|---|---|---|---|
| அ.ப. | நிநித . தபபமக - மபமக - ரிசநிச | ககரி - கமபகரி | கமபதா - ச்சா | |
| | நி - த . . . மும் . . நின் | . . . . . சந் . | . . . . . . | |
| | நிச்க்க்ரி - நிச்ரிநீதப - பமபத | நிச்ரிநிதப - மப | ம தப பமகரிச ‖ | |
| | நி - . . . . தி . . மே. விப் | ப . . . - ரி - | . வாய் . . | |
| | காரிச - ரிசநீதப - தநிசாரிநி | சரிகா - ரிகமா | கபாம - நிதபத | |
| | மகரி - பமதப - நிதப - ச்நிதப - ரிச் | க்ரிச்ா - நிதபா | மநிதப - மகரிச ‖ | |
| ச. | மா . . - . . நீநிததம - மகரிச | . க - ரிகமா | . கமப - மகரிக ‖ | |
| | மா . . . - க . . . ரு . . . | ணேயின் - . நே | . த்ரா - . . | |
| 1. | சா . . . . - சா . . நீநீதா | டா . . - தா | நீசாரீநீ - | |
| | ரீ . . . . - ரீ . . ரீகாமா | க . ரீ . சா | . - நிசா ரீக ‖ | மா. |
| 2. | நீநீ - தாபா . . - தாநீசா | ரீ- நீசாரீ | . . - ரீகாமா | |
| | மகாரீச - நிநீதாப - தநிசரி | கரிநி - சரிகக | . - மநித-மகரிக ‖ | மா. |
| 3. | கா . . - மக - கமகக - மாமா | ககாநீ - சநிச | ரிகமக - மாகரி | |
| | கமபாகரி - கமமாகரி - காரிச | சாநிகா - ரிகம | கபா - பமகரிக ‖ | மா. |
| 4. | நீ . . - . . ததநிநித - நிதபதம | பா . . - . . மப | நிதபப - மகபம | |
| | பாமகரிச - நீதமத - மபதநிச் | மபதநிச்ா - கரி | கமபா - நிசரிக ‖ | மா. |
| 5. | ச்ா . ச்ாச் - நிச்ரிநீத - பதமப | கா - ரீகமப | த - மநிதபமகரி | |
| | சா - மகரிசா - பமகரிசா - நிதம | கரீ - ச்நிதப - ம | கரிக-மபா . - த | |
| | மகரிகா - மநிதபதா - நிச்ரி - நிச் | க்ரீ - நிக்ரிச்ரி | நிச்நிரி - ச்ா . . | |
| | பதநிச்ரிக் - ரிகமபதநி - ச்ரிக்ரி | ச் - ச்ாரிநிதப - ப | . தமகரி - ரீக ‖ | மா |

## கீர்த்தனைகளும் இராக விந்நியாசங்களும்

ஜன்னிய இராகங்களில் சில சுரஜதிகளையும், வர்ணங்களையுங் கூறினபிறகு வர்ஜ இராக கீர்த்தனைகளில் சிலவற்றையும், அந்த இராகங்களின் போக்கை விஸ்தரிக்கும் சுரவிந்நியாசங்களையும் இப்போது கூறுவோம். இவைகளைக் கூறுமுன், கீர்த்தனைகளைக் குறித்தும் அவைகளைப் பாடுங்கிரமத்தைக்குறித்தும் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறோம்.

1. கீர்த்தனை. இது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று மூன்று பிரிவுகளுடையது. பல்லவிக்குப் பின்பு அனுபல்லவி சரணங்களைப் பாடி முடித்தபின்னர் பல்லவியைத் திருப்பிப் பாட வேண்டும். சில சமயங்களில் அனுபல்லவியின்றி பல்லவியும் சரணமுமட்டுமே கீர்த்தனையாயிருக்கும். பல்லவி அனுபல்லவியின்றி சரணமட்டுமே [illegible]ரும்போது கண்ணிகள் என்னப்படும். அவைகளைப் பல்லவிபோல் திருப்பிப பா[illegible] கீர்த்தனைகள் கிருத்திகள் என்றுங் கூறப்படும்.

2. பாடுங்கிரமம். இந்த சங்கீத முறையின்படி கீர்த்தனைகள் அதி மாதுரியமாயும், இனிமையாயும் பாடப்படும். அப்படிப் பாட வேண்டுமாயின் சங்கீதத்தில் கமக விதிகளை யனுசரிக்கவேண்டும். கமக மென்று சொல்லப்படுவது சுரங்கள் ஒன்றோடொன்றொன்றித்து மேற்கீழ்ச் சுரங்களைத் தழுவி இசைவான நாதத்தைப் பிறப்பிப்பதாகும். இதற்குப் பத்து விதிகள் சங்கீதத்திலேற்பட்டிருக்கின்றன. அவைகளின் விவரத்தை அனுபந்தத்தில் காண்க. அவ் விதிகளுக்கிணங்கச் சுரங்களை ஜாரியும், அனுசுரங்களைப் பிடித்துப் பேசுவித்தும், ரவைப்பொடிகளைச் சிந்துவதைப்போல ஒரிக்கைப் பிடித்தும் பாடும்போது அதிக ரக்தியையும் பக்தியையுங் கொடுக்கும். மேலும் இவ்வித சுரப்பிரஸ்தாரத்தோடு காலப்பிரஸ்தாரத்தையும் அனுசரித்து, அவ்வத்தாளங்களுக்கிணங்க, சுரங்களை அரைக்களை, கால்களை, அரைக்கால் களைகளாக மடித்துப் பெருக்கிப் பல பேதங்க ளேற்படும்படி பாடும்போது அநேக வித்தியாசங்களை யுண்டாக்கிப் பாடலாம். இவ்வாறு பாடுவதற்குச் சங்கதி

போட்டுப் பாடுதலென்னப்படும். பிரசித்திபெற்ற தியாகையர் இயற்றின கீர்த்தனைகள் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஒவ்வொன்றும் பலவேறு சங்கதிகளமைந்து பாடப்பட்டிருக்கின்றன. அவற்றின் போங்கை யனுசரித்து அவ்வளவு பெருமிதமாய்ச் சங்கதிகள் போட்டுப் பாடாவிடினும், சிறுக அமைத்து அவரவரும் பாடிக் கொள்ளலாம். இந்தப் புஸ்தகம் ஆரம்பிகளுக் கெழுதப்பட்டதால் சங்கதிகள் அதிகமா யெழுதப்படவில்லை. இராகத்தையும் தாளத்தையுமட்டுங் குறிக்கச் சுரங்களெழுதப்பட்டிருக்கின்றன.

பிரதி இராகத்துக்கும் இராக இலக்ஷணமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## 1. ஔடவ இராக கீர்த்தனைகள்

### 1. இராகம் : ஹம்சத்வனி—ரூபகதாளம். $\frac{2,\ 4}{6}$

இராக இலக்ஷணம். (1) மேளகர்த்தா—தீரசங்கராபரணம் (29)

(2) சுருதி—(ரி க♯ ம த நி♯♯)

(3) இலக்ஷணம்—ஔடவ ஔடவம்

(4) மூர்ச்சனை— { ஆரோ—ச ரி க ப நி ச் / அவ—ச் நி ப க ரி ச

(5) சாயா—அந்தரகாந்தாரம், காகலிநிஷாதங் [கள்.

ப. | ச் நி | ப க ரி ச | கா | ரி சா ;; |
மன திற் குடிகொள் வா யே எம்

| ப நி | ச ரி க ரி | சா | . க ப நீ ||
மா னெ நீ ம ஞே கரனே

அ. ப. | க ப | நி நி ச்ா | நி ச் | ரி க் ;; |
உனை நி னை வோ ரி த ய மெனும்

| க்ா | ரிக் ;; சநி ச்ரி | சா ;; | ச்நி பாநிச் ;; ||
உ யர்கு டி வில் உறை ப வனே

ச. | ப க | ரி சா ரி | க ரி | ச ரி ச நி |
தின மு மென்னில் நீ யி ருந்தால்

| ப நி | ச ரி க ரி | ச ரி | ச ரி சா |
சிந் தை மிகவே களி க் கும்

| க க | ப க ப நி | ச்நிபா | கப கா ரீ சா
கன து யரம் அந் த காரம்

| ரி க | ரி சா ரி | க ரி | க ச ரி ச |
கவ லை யாவும் நசி க் கும்

| ப க | ப க ரி ப | நி ப | க ரி சா |
வன மெ னமண மிகு குண மெலாம்

| சா கா | ரீ பா பா | கா | க நீ பா |
மலர்ந் து கனிந்து து ளிர்க் கும்

| க ப | நி நி ச்ா | நி ச் | ரி க் ரீ |
அன வ ரதம் இத ய வூற்றில்

| க்ா | ரிக் ரீ ச்நி ச்ரீ | ச்ா ரீ | ச்நி பா நிச் ரீ ||
அன் பு சுரந்து கொப்ப ளிக்கும்

## இராக விந்நியாசம்

சா—, ரிகபநிகா, பநிச்ரிக்ா, ப்க்ரிச்நிப, கபநிச்ரீ, பநிச்ரி, கரிநிப, கநிபகரி, சநிரிச, கரிபகநிப, ச்நிக்ரி, நிகரிநிபக, பநிச்ரீரி, க்க்ரிச்நிப, நிநிபகரிச, பாநிசரீ, நிசரிகா, சா, ரிகபநிபா, கபநிநி, ச்நிக்ரிநிபநி, ரிசா, பநிச்ாநிபகா, (நி) பாகரிச, நிபநிசரீ—, சா—.

## 2. இராகம்: மோஹனம்—ஆதிதாளம். $\frac{4, 2, 2}{8}$

இராக இலக்ஷணம். (1) மேளம்—ஹரிகாம்போதி (28)
(2) சுருதி—(ரி க# ம த நி)
(3) இலக்ஷணம்—ஔடவ ஔடவம்.
(4) மூர்ச்சனை— { ஆ: ச ரி க ப த ச் / அ: ச் த ப க ரி ச }
(5) சாயா—சது—ரிஷபம், அந்தரகாந்தாரம், சது—தைவதம்.

ப. | சரிகா . . கா கததப கரிசத | சரிகப கரிசத | சரிகப கரிசத ||
பறையா நீ சிதம்பர மென்று சொல்லப் படுமோ டாபோகப் படுமோ டா அடே

அ. ப. | ககசா பபபப ததச்ா ச்ச்ா | தர்ச்ா ச்ததப | கததப கரிசத ||
அறியாத் தனமினி சொன்னலினிமேல் அடிப்பேன் கூலியைப் பிடிப்பேன் பாவி— (ப)

ச. | கததப கரிசரி கபா . . . கக | கததப கரிசரி | கபா . . காக |
சிதம்பர மென்பதை விடு —கொல்லைச் சேரடி யிலேவந்து படு — நாற்றைப்
| கததப கரிசரி கபா . . . கப | ததச்த தபகரி | தபகரி ரிசசத ||
பதத்தில் பிடுங்கியே நடு — கருப் பண்ணனுக் கோர்பலி கொடு . . அட . (ப)

2. எப்போதும் ஒரு தடிபிடி — கையி — லெடுத்துக்கொண்டே தமுக்கடி—உள்ளங்
கற்பனையாய்ப் பள்ளுபடி — கால் — நோகாமலே காடியைக் குடி—அட (ப)

3. கள்ளந் தீருதற்குப் பாரு — உன் — கால்படு பண்ணையிலிரு—இது
சொன்னது மில்லையோயுன் குரு — நீ—சுகமுடன் வாழ்ந்துகொண்டிரு—அட (ப)

## இராக விந்நியாசம்

சா—, ரீகா, பா—, காதபாகரீ, ரிகப (க) ரீ, ககபத (ச்த) ச்ா, ச்ரிக்ரிரிக்ரீ, ச்ா—தபதா . . ., கா . . . , பதச்ா, பதச்ரிக் ரிச்தா . . . ச்ரிக்ப் (க்) ரீச்ா, தக்ரிச் தச்தப, காபதாபகாரீ , (ரி) சா (க) ரீ (ப) தா (க்) ரீ, ச்ரிக் ரிச்தாப, தா, . . . காதபதாப, கா . . . ரீ, சரிகபா (த) கபகரிச, ததபகரிச சா—, தபா, க்ரீ, ரீகபகாரி—, சா—.

குறிப்பு—, — . . . இக்குறிகள் சரங்களை நிறுத்தவேண்டிய இடங்களைக் காட்டும். () இதற்குள்ளடங்கின சுரத்தை அனுசுரமாய்ப் பிடிக்கவேண்டும்.

---

### 3. இராகம் : மத்யமாவதி-ஆதிதாளம். $\frac{4, 2, 2}{8}$

இராக இலக்ஷணம்.
(1) மேளம்—கரஹரப்ரியா (22)
(2) சுருதி—(ரி க ம த நி)
(3) இலக்ஷணம்—ஔடவ ஔடவம்
(4) மூர்ச்சனை— { ஆ: ச ரி ம ப நி ச் / அ. ச் நி ப ம ரி ச.
(5) சாயா-சுரு - ரிஷபம், சுத்தமத்யமம், கைசிகிநிஷாதம் சுரங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ப. | ரீ . . | . . ரிச | ந்பா | ந்சா | ரீ . . | ரீமா | பாமா | ரீசா |
| | இத் | தனை | கோ | பமும் | நல் | லாய் | வந் | தது |
| | ரீசா | ந்பா | ந்சா | ரீபம | ரீ . . | . . . . | சா . . | . . . . ‖ |
| | எ | தடா | தம்பி | இது | சொல் | | லாய் . | |
| அ. ப. | பா . . | நீபா | நீச்ா | ரீரீ | ச்ரீ . | ம்ாரீ | ச்ாரிச் | நீச்ா |
| | தத் | துவ | மாக | உந்தன் | புத் | தியெல் | லாம் | வெள்ளை |
| | ரீரி . . | ச்ாச்ா | நீபா | நீச்ா | ச்ாரிச் | ச்நிமப | மாமப | மரிசா ‖ |
| | தகப் | பன்பேர் | விளக் | கிற | பிள்ளை | யல் | லவோ | பிள்ளை (இ.) |

ச. | ரீமா பா . . நீ . . நீபா | மாபா நீபா | பாமா ரிசா |
இரும் போ தாய் மனம் காட் டிலே போய்த் திரி

| ரீ . . மாரீ ரீசா நீபா | ரீ . . மாரீ | பாமா ரிசா |
என் னவும் வாய்வ ருமோ நீ யதைப் பரி கரி

| பா . . நீபா நீச்ா ரி்ரி் | ச்ரி் . ம்ாரி் | ச்ாரிச் ந்ச்ா |
கரு ம்புக சப்ப தெல்லாம் வாய்க் குற்ற மே . சரி

| ரி் . ச்ாச்ா நீபா நீச்ா | ச்ாரிச் ச்நிமப | மாமப மரிசா ||
கா லம்செய் தலல் லாமல் ஆர் செய்தார் அரி கரி (இ.)

2. தகப்பனைச் சத்யவாக்யன் அல்லவென்று கழிக்கவோ
தாய்கொண்ட விரதத்தை முடியாமல் அழிக்கவோ
அகத்துணை பாம்பரதன் செல்வத்தை யொழிக்கவோ
அப்புறம் உனைக்கண்ட பேரெல்லாம் பழிக்கவோ—இ.

3. உரம் ஆகுந் தவஞ் செய்தால் நல்லதோ தீதோ
ஒன்றும் பேசாதே கோட்டைக்குள்ளே படைவெட்டாதோ
அரசு பரதன் கொண்டால் நமக்கினிமேல் வாராதோ
ஆக்கப் பொறுத்த நமக்காறும்மட்டும் பொறுதோ—இ.

## இராக விந்நியாசம்

சா—, ரிமபநீ . . , மபநிச்ா—, பாநிச்ரிம்ரி் . . ச், நிச்ரிம்ப்ாம்ப்ம்ரி் . . . ச்ாநி, ச்ரிம்ா . . . ச், நிச்ரிச்நீ . . . , ச்ாரி ; நீச்பாநிமாப, ரிமபநீ . . . , ச்நிபம, ரிபமரிமரீ . . . சா ; நிசரிச நிபநீ . . . சாரீ மரீ . . . சா.

4. இராகம்: ஆபோகி—ரூபகதாளம். $\frac{2,4}{6}$

இராக இலக்ஷணம். (1) மேள—கரஹரப்பிரியா (22)
(2) சுரு—(ரி க ம த நி)
(3) இலக்ஷ—ஔடவ ஔடவம்
(4) மூர்ச்— { ஆ: ச ரி க ம த ச் ; அ: ச் த ம க ரி ச }
(5) சாயா—சுத்த மத்யம சதுஸ்ருதி தைவதங்கள்.

ப. | கரி | மகரிச | சத | த சாச | சமா | . மதா | ச்த | ம காகரிச ||
அஞ் ஞைகளின் நேசன் இயேசு அன்பன் தனக் குண்டோ ஈடு?

அ.ப. | தச்ா | . ச்ரி | க்ரி | க் ரி | ச்ரி | க்ரி ச்த | தச்தத | மா காகரிசா ||
மனோ கரன் தே வசேயன் வைய மீட்க வந்த தூயன்.

ச. | கம | த ததா | தச் | த மாகரிசா | கரி | ககரிக | மா | .... |
உல கில் வறியர் பிணி யாளர்கள் ஊனர் கூனர்கள்

| கம | ததச்ா | தச்தத | மா காகரிரீ | கரி | க கரிரிசரீ | மா | .... |
நல மெலாமற்றுப் பாவ நொதியில் நயந்த தீனர் கள்

| தச் | ச்ாதச்தாச்ா | தச்தா | மா காகாரீ | கா | மா தாதா | மத. | தச்ாச் |
நிலைமை கண்டு கண்ணீர் சொரிந்து நெஞ்சமுருகி யாவணைத்து

| தந | ச் ரி க்ா | க்ா | ரி ரி ச்ா | தச் | ரி க் ரிச் | தச் ச. | ம காரிரி ||
நித்ய வாழ்வுஞ் சுக முந்தந்த நேயத்தில் ஒப் பில்லா எங்கள்!

## இராக விந்நியாசம்

சா—, ரிகா . . . மா—, தா . . . ச்ா—, தமதச்ரிக்ா . . . , ரிக்ம்க்ரிச்ா, ரிதச்ாத மகமதா மதச் ரிக்ா . . . ரிச்தச்ா தமகா . . . ரிதசரிகா . . . ரிச, ரீகமா—, கமதச்ா, தச்தாம, கமகாரிச, ரிதசா—.

---

## 2. ஔடவ ஷாடவ இராக கீர்த்தனை

இராகம்: சாமா—ரூபகதாளம். $\frac{2, 4}{6}$

இராக இலக்ஷணம்.
(1) மேள—ஹரிகாம்போதி (28)
(2) சுரு—(ரி க$^{\#}_{\#}$ ம த நி)
(3) இலக்ஷ—ஔடவ ஷாடவம்
(4) மூர்ச்— { ஆ: ச ரி ம ப த ச் / அ: ச் த ப ம க ரி ச
(5) சாயா—சுத்தமத்யம சதுஸ்ருதி தைவதங்கள்.

ப. | பத | சரிமா || . . | ஂகரிரி || சரி | கசரீ || ரிப | மகரிச ||
பரம் பொருளே கடைக்கண்ணால் பார்த் தருளே காத் தருளே!

அ. பல். | மக | பபதத || ச்ா | நச்ச்ா || தரி | ச்தபா || தப | மகரீ ||
நிரந் தரநிர் மல தூயா நேயர்கட்கென் றுஞ் சகாயா! (ப)

ச. | பா | பபபா || தப | ஂகரீ || சரி | ககரீ || ரிக | ரிரிசா ||
பத்தி யில்நான் குறைந் தவன் பாவ குணம் நிறைந் தவன்
| மக | பபதா || ச்ச் | தச்ச்ா || தரி | ச்தபா || தப | மகரீ ||
உத் தமருள் மறைந் தவன் உள்ளந் தீமை யுறைந் தவன். (ப)

2. நின்னுளத்தை நானறியேன் நீதிநெறியைக் குறியேன்
பன்னவு மகா சிறியேன் பத்தி சம்பத்தில் வறியேன்—(ப)

## இராக விந்நியாசம்

சரிமா பதா, ச்ா—, ரிம்ாக்ரி ச்ரிக்ச்ா தபம, மபதாப மாகரீ, சரிமா, மகரிமப தாதபம, பதச்ரி ம்ாக்ரி, ம்க்க்ரிரிச், தச்தப மபத தபம மகரி, சரிரிம பாம பதா, பதச்தபா, மகரீ . . . , சரிமாகரி, சரீதசா, தபுதசா—.

---

## 3. ஔடவ சம்பூரண இராக கீர்த்தனைகள்

1. இராகம்: பிலஹரி—மிஸ்ரசாபுதாளம். $\frac{(3+4)}{7}$

இராக இலக்ஷணம்.
(1) மேள—தீரசங்கராபரணம் (29)
(2) சுரு—(ரி க $\frac{1}{2}$ ம த நி $\frac{1}{2}$)
(3) இலக்ஷ—ஔடவ சம்பூரணம்
(4) மூர்ச்— { ஆ: ச ரி க ப த ச்
அ: ச் நி த ப ம க ரி ச }
(5) சாயா—சது—ரிஷபம், அந்தரகாந்தாரம், சது—தைவதங்கள்.

குறி. அவரோஹணத்தில் கைசிகி நிஷாதமும் உபயோகிக்கப்படுகிறது.

க. | . கக பாதா || ரிச்ா ச்நிதா || . ச்ா ச்ாச்நி || தபா பமகரி ||
. மண் ணில ரசர் போல கா ணுகி ருயே ஆசீர்
| . கக பாதா || ச்ச்ா ச்நிதா || ச்ா. . . . . || . . . . . . . ||
. வா தம் ரகு ரா . மா. . . . . . . . . . . .

| . தரி ரிசா || நிதா பாபா || . பத் பாமக || ககா கரிரீ ||
கண் ணில்வே தியர் போல தோ ணுகி ரூயே நமஸ்

| . கக பாமக || கரீ சரிகச || ரீ . . . . . || சா . . . . .
கா ரம்ப ரசு ரா . மா . . . . . . . . . . .

2. தாடகை யெனும் பெண்மேல் சண்டைகொள் ளாசர்க்குத்
தான் விதியோ ராமா.
வேடர் தொடுக்கும் வில்லைப் பிராமணர் தொடத்தலை
விதியோ பரசு ராமா.

3. ஆனல் பெண் கொலை செய்தல் ஆமோ உனக்கிது
அடைவோ ரகு ராமா.
தானகப் பெற்றெடுத்த தாயைக் கொலை செய்தாயே
தகுமோ பரசு ராமா.

4. தருமமா எனைப் பெற்ற தகப்பன் சொற்படி செய்தேன்
தாய்க் கொலையே ராமா.
குருவார்த்தை தடுக்காமல் நானும் செய்தேன் பெண்
கொலையோ பரசு ராமா.

## இராக விந்யாசம்

சா, ரீ . . . கா–பா–, தா . . . ச்ா, ச்நிதா . . . , ச்ரிக்ரிச்ா, ச்நிதாபா, பதநி, தபதாப
மகரீ . . . , ரிகப (க) பா–, மகபததா . . . , பாதநிதாநி–, பதா . . . ப, மகபதச் (நி) தா . . . ,
ச்ரிக்ரி, க்ாப்ம்க் . . . ச்ா , ச்ாநிதத , ரிநிதப, பாதப மகரீ . . . , சரிகபாமரி . . . சா—; சநிதநித
சா–, ரீ . . . கதா . . . , சரிகரி நிதபமகரீ . . . , காத பாத, நீ . . . தபமகரீ . . . , சரிகசா,–, நிதசா–.

## 2. இராகம் : தந்யாசி—ஆதிதாளம். $\frac{4, 2, 2}{8}$

இராக இலக்ஷணம். (1) மேள—ஹனுமத்தோடி (8)
(2) சுரு—(ரி கம த| நி)
(3) இலக்ஷ—ஔடவ சம்பூரணம்
(4) மூர்ச்—{ ஆ: ச க ம ப நி ச் / அ: ச் நி த ப ம க ரி ச }
(5) சாயா—சாதாரண காந்தாரம், கைசிகி நிஷாதங்க.

ப. | பாநீ ச்ரச்ர ச்நிதா பாமா | மாகா காரீ | சநா மாபா ||
மங் கைத னை விட் டகன் றோ ர டு

| பா . நி தாபா மாகா மகபம | கரீ . . . . . | ரா . . . . . . ||
வழி தப்பிப் போய லைந் தே ர

அ. ப. | காமா பாநீ நீ . . ச்நிதப | . . பநி ச்ரநீ | ச்ரா . . ச்ரச்ர ||
சொந் தம்பா ராட் டிய மெய்ப் பனை விட் டு

| பாநீ ச்ரச்ர ச்நிதா பாமா | மாகா காரிச | காமா ரநீ ||
தோன் றிய ஆ சையி னல் மதி கெட் (ம)

ச. | பாநீ ச்ரச்ர நீதா பாமா | மா . . மககா | காமா . . ||
ஆ ரத்துப் பச் சையைக் கண் டோ டின

| பா . . தபமா மாகா ரீசா | சாரீ சாந் | சா . . ச ||
தோன் றிய கான னீ ரத னை நா டின டு

| கா்மா் பாநீ நீச்ா நிதட | பாநீ ச்ாநீ | ச்ச் .. ச்ா .. ||
சோ ரத்த னமாய்க் காடு மே மெசா டின தே
| ச்ாக்ா ீச்ா நீதா பாம | மா .. மாகா | காமா பாநீ ||
சூழ் துயர்க் கா ளா இ நீ டின தே (ம)

## இராகவிந்நியாசம்

சா—, காம பநீ..., ச்நிச்ீ... ச், நிரிச்நிச்தா... ப, கா... பா, பமபா—, மபநீ... ச்தா... பா, மபநீ... ச்ா; கமபநிச்கா..., மக்ரிச் நிதபமகா..., காமகா, மாபமா, பாநிபா, நிச்ாநி, க்ா... ரிச்தா... பகா..., மப,பா நபமகா... ரீசநிசதா... ப, ... சா—.

---

3. இராகம் : ஆபி—ஆதிதாளம். $\frac{4,2,2}{8}$

இராக இலக்ஷணம். (1) மேள—தீரசங்கராபரணம் (29)
(2) சுரு—(ரிக ம த நி)
(3) இலக்ஷ—ஔடவ சம்பூரணம்.
(4) மூர்ச்—{ ஆ: ச ரி ம ப த ச் / அ: ச் நி த ப ம க ரி ச
(5) சாபா-சது-ரிஷபம், சுத்தமத்யமம், சது-தைவதங்கள்.

௧. | பாதப பா.. பததப பா.. | மபத ச்நிதப | மபமக ரிசரீ ||
முத்திநெறி யறியா த மூர்க்க ரொடு முயல்வே னை
| தாதரி ரீ.. ச்நிதத பா.. | மடத ச்நிதப | பாமக ரிசரீ ||
பத்திநெறி யறிவித் து பழவினை கள். பாறும்வண் ணம்

| பாதப பா . . பதத்ப பா . . | ரமபத ச்நிதப | மபமக ரிரீச ||
சித்தம ல டறுவித் து சிவமாக் கி . . யெனையாண்ட

| தா தத ச்ா . . தச் தத பா . . | ரமபத ச்நிதப | பாமக ரிசரீ ||
அத்த னெனக் கருளிய வா ரர்பெறு வா ரச்சோ வே.

2. நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனை
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் சுத்தையெனக்
கறியும்வண்ண மருளியவா ரூர்பெறுவா ரச்சோவே.

3. செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைநலம் அறிவித்து முதலைய முல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக் கருளியவா ரூர்பெறுவா ரச்சோவே.

## இராக பிங்கியாசம்

சா–, ரிமபதா . . ., பமபத ச்ாநிதா . . ., ர்ிம்க்ர் . . ., ச்ார்ிச்நிதா . . ., ரிச்நிதா . . ., பமக.ரி
. . ., சரிமா . . . கரீ, சரி சநிதாப மபத சசரிரி . . . கரீ . . . சா–.

## 4. ஷாடவ ஷாடவ இராக கீர்த்தனை

இராகம் : பூரண ஷட்ஜம்—ரூபகதாளம். $\frac{2, 4}{6}$

இராக இலக்ஷணம். (1) மேள—நடபைரவி (20)
(2) சுரு—(ரி க ம த நி)
(3) இலக்ஷ—ஷாடவ ஷாடவம்.
(4) மூர்ச்—{ ஆ: ச ரி க ம ப நி ச் ; அ: ச் நி ப ம க ரி ச }
(5) சாயா—சாதாரண காந்தார சுத்த மத்யம கைசிகி நிஷாதங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ப. | நீ ச்ா | நீ பா . . மா | \|\| | கா கா | கா ரிக ரீ சா | \|\| | |
| | கா . | . ருண் ய | | நா . | த னே . யென் | | |
| | . . நிநி | சா ரீ கா கா | \|\| | மா . . | . . . , பா நீ | \|\| | |
| | கலி | யை நீக் கை | | யா . | மிகு | | (கா) |
| அ. ப. | . . ச்ா | ச்ா ச்ா ச்ா . . | \|\| | ரிச் ரி | ரி ரிச் ச்ா ச்ா | \|\| | |
| | . பா | ர டர்ந்த | | பா . | வக் க லி யைப் | | |
| | ச்ா ச்ா | நீ பா பா மா | \|\| | கா ரீ | கா மா பா நீ | \|\| | |
| | பரி | க ரிக் கவே | | வந் | த திவ் ய | | (கா) |
| ச. | பா . . | . . மா கா ரீ | \|\| | மா . . | . . கா ரீ ச்ா | \|\| | |
| | கோ - | ரக்கொடும் | | பா - | வி ய வன் | | |
| | சா . . | நீ சா கா ரீ | \|\| | கா கா | மா . . . . கம | \|\| | |
| | கொண் | டெ னைத்துன் | | னெறி | யில் தினம் | | |

| . . க்ா | க்ா க்ா க்ா க்ா || க்ரி ரீ | ரீ ரிச் ச்ா ச்ா ||
சி ர ழித் துச் சிந் . தை ம யக் கித்
| ச்ா . | நீ பா . . மா || கா மா | பா . . நீ நீ ||
தீ . ந ர கில் ஆழ் த் து கின்றான். (கா)

2. சோதனையாம் மாய வலையின்
சுருக்கி லென்னைப் பிணித்துக்—கொடும்
பாதகமெனும் பையி லடைத்துப்
பதைபதைக்க வேசெய்கின்றான்— (கா)

---

## 5 ஷாடவ சம்பூரண இராக கீர்த்தனைகள்

1. இராகம் : பாஜ ~—மிஸ்ரசாபுதாளம் $\frac{7\ (3+4)}{7}$

இராக இலக்ஷணம். (1) மேள—மாயாமாளவகௌள (15)
(2) சுரு—(ரி♭ க♯ ம த♭ நி♯)
(3) இலக்ஷ—ஷாடவ சம்பூரணம்.
(4) மூர்ச்— { ஆ : ச க ம ப த நி ச்
அ : ச் நி த ப ம க ரி ச }
(5) சாயா—அந்தரகாந்தார சுத்த மத்யமங்கள்.

ப. | . . ச கா மா || பா. தாநீ || ச்ா . . . . || . . . . . . . ||
இந் தாவி பீ. . ஷ ணு. . . . . . . . . . . .
